விலை ரூபா: 8.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | கார்த்திகை 05 | ஞாயிற்றுக்கிழமை (20.11.2005) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 336

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

- யுத்த நிறுத்த ஒப்பந்தம் மீளாய்வு செய்யப்படும்
- பொதுக்கட்டமைப்பு கைவிடப்பட்டு புதிய அமைப்பு உருவாக்கப்படும்
- புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும்
- இலங்கையின் சமாதான முயற்சியில் பங்கேற்குமாறு வெளிநாடுகளுடன் பேச்சு நடாத்தப்படும்.

# தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை!


## பதவியேற்றபின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரை

(கொழும்பு)

**இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் வகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு ஐந்தாவது நிறைவேற்று அதிகாரம் பொருந்திய ஜனாதிபதியாக பதவியேற்ற மகிந்த ராஜபக்ஷ தனது கன்னியுரையில் குறிப்பிட்டார்.**

ஜனாதிபதி பதவிப் பிரமாணம் செய்யும் நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது. பதவியேற்றதை அடுத்து நிகழ்த்திய கன்னி உரையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்;

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அரசாங்கம் விடுதலைப் புலிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும். (12 ஆம் பக்கம் பார்க்க)



## மகிந்த நேற்று பதவிப் பிரமாணம்


(கொழும்பு)

இலங்கையின் ஐந்தாவது ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட மகிந்த ராஜபக்ஷ நேற்று ஐந்தாவது நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியாக பிற்பகல் 1.22 மணிக்கு பதவியேற்றுக்கொண்டார். ஜனாதிபதி செயலகத்தில் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

பதவியேற்பு வைபவத்தில் ஆளும் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் பிரதிநிதிகளும் வெளிநாட்டு ராஜதந்திரிகளும் கலந்துகொண்டனர்.

பதவியேற்பு வைபவத்தை அடுத்து முப்படையினர் புதிய ஜனாதிபதிக்கு சம்பிரதாயபூர்வ அணிவகுப்பு மரியாதையைச் செலுத்தியதுடன் மரியாதைப் பீரங்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியலுக்கு ரணில் முழுக்கு?



(கொழும்பு)

**ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரசியலிலிருந்து ஓய்வுபெறத் திட்டமிட்டிருப்பதாக கட்சி வட்டாரங்களில் இருந்து பரபரப்புத் தகவல் வெளியாகியுள்ளது.**

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு மீண்டும் தோல்வியடைந்திருக்கின்ற ரணில் விக்கிரமசிங்க, கட்சிக்குள் ஏற்பட்டிருக்கின்ற மாற்றுக் கருத்துக்கள் மற்றும் பிணக்குகள் காரணமாக அரசியலிலிருந்து துறவறம்பூண முடிபுசெய்திருப்பதாகக் கூறப்படுகிறது. இது தொடர்பான அவரின் அறிவிப்பு மிக விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமை தொடர்பாக சர்ச்சை ஏற்பட்டிருக்கிறது. ரணிலின் தலைமை காரணமாகவே கட்சி வீழ்ச்சியை நோக்கி சென்றுகொண்டிருப்பதாகவும்,

தொடர்ந்து அவரின் தலைமை தொடருமானால் பழம்பெரும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி உடைந்து சிதைந்துவிடும் என்றும் கட்சிக்குள் மாற்றுக் கருத்துக்கள் வெளியாகியிருக்கிறது.

இந்நிலையில் ஏற்பட்டிருக்கின்ற சர்ச்சையைத் தணிக்கும்முகமாகவே ரணில் விக்கிரமசிங்க அரசியலிலிருந்து ஓய்வுபெறும் முடிபை எடுத்திருக்கலாம் என்று கட்சித் தகவல்கள் கூறுகின்றன. (இ

## புதிய வரவு செலவுத்திட்டம் விரைவில் சமர்ப்பிக்கப்படும்

### மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)

புதிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் முதலாவது வரவு செலவுத்திட்டம் மிக விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபாலசிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதனால் தேர்தலுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட யோசனை ரத்துசெய்யப்படவுள்ளது.

இதற்கமைய மகிந்தவின் சிந்தனை மற்றும் தேர்தல் பிரசாரத்தின் போது மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு புதிய வரவு செலவுத்திட்ட யோசனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (இ-4)

## அநுராவுக்கு பிரதமர் பதவி; மகிந்தவுக்கு சு.க. அழுத்தம்

(கொழும்பு)

புதிய அமைச்சரவையின் பிரதமர் பதவியினை அநுரா பண்டாரநாயக்கவுக்கு வழங்க வேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து அழுத்தம் கொடுக்கப்பட்டுவருவதாகத் தெரியவருகிறது.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் மகிந்தவுக்கு ஆதரவாக அநுரா பண்டாரநாயக்க செயற்படவில்லை என்பதைக் காரணமாக வைத்துக்கொண்டு அவருக்கு அமைச்சரவையில் அந்தஸ்து வழங்குவதில்லை என்ற முடிவில் ஜனாதிபதி மகிந்த இருப்பதாக் கூறப்படுகிறது.

எனினும் சுதந்திரக்கட்சியின் வலியுறுத்தலுக்கு அமைய (12 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவை கலைப்பு!

(கொழும்பு)

ஐந்தாவது நிறைவேற்று அதிகாரம் பொருந்திய ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ நேற்றுப் பதவியேற்றதையடுத்து அமைச்சரவை கலைக்கப்பட்டது.

ஜனாதிபதியாக மகிந்த பொறுப்பேற்றதனால் அவர் பிரதமர் பதவியிலிருந்து விலகினார். இதன் காரணமாகவே அமைச்சரவை கலைக்கப்பட்டுள்ளது.

விரைவில் புதிய அமைச்சரவை அமைக்கப்படுமென்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

புதிய அமைச்சரவையில் புதிய பல மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

இதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுவதாகவும், ஜே.வி.பியினருக்கு முக்கிய அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ

உங்கள் காரியாலயத்தில், உங்கள் வீட்டில், நீங்கள் விரும்பிய இடத்தில்
- உலக சுகாதார விதிமுறைகளுக்கமைவான தயாரிப்பு முறை
- அதிநவீன தயாரிப்பு சாதனங்கள் மூலமான இரட்டிப்பு சுத்திகரிப்பு
- இலங்கை தரநிர்ணய உத்தரவாதம் SLS
- உங்கள் வாசல் வரையான இலவச சேவை

மேலதிக விபரங்களுக்கு
SWISS MINERAL

20 லீட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் 210/= மட்டுமே


Head Office
Gbn,posfach
8026 Zurich
Switzerland
Tel+412438259



Factory;
231, Temple Road,
Nallur, Jaffna.
Phone : 222 8122
0773126963

# மனிதநேயமும், சேவையில் அர்ப்பணிப்புமே இறையரசின் மக்களாகும் தகுதியைத் தருவன

உயர்ந்த இலட்சியங்களைக் கொண்ட வாழ்க்கையே தலை சிறந்த பெருமையுள்ள வாழ்க்கையாகும்.



இவ்வாறான வாழ்வைத் தன தாக்கிக் கொள்பவர்கள் எத்தனை பேர் பணத்துக்காகவும் பொன், பொருளுக்காகவும் உயர்ந்த இலட்சியங்களை விட்டு விட்டு தாறுமாறான வாழ்வை வாழ்கின்றனர். குறுகியகால உயர்வுகளை அடைவதற்கு பிழையான நியாயப்படுதத்தல்களை முன்வைக்கின்றார்கள். கண்ணியமான மனிதன் எப்போதும் நீதியின் வழியே சிந்தனை செய்கிறான் என்று சிந்தனையாளர் ரூசோ கூறுவது நோக்கத்தக்கதாகும்.

## ஏழைகளை நேசித்தார்

மனிதக் கணிப்பின்படி உங்களில் ஞானிகள் எத்தனை பேர்? வலியோர் எத்தனை பேர்? உயர் குடிமக்கள் எத்தனை பேர்? ஆனால் கடவுள் ஞானிகளை வெட்கப்படுத்த மடமையென உலகம் கருதுபவற்றை தேர்ந்துகொண்டார். (1கொரி1:26-27)துன்பத்தைக் கண்டு இரங்குதல் மனிதாபிமானம், அதனை நீக்குவதே தெய்வீகம் இன்றைய நவீன சமூகம் புதுமைகளை வரவேற்பதால் பழமைக்கும், ஏழ்மைக்கும் மதிப்பளிப்பது அரிதாகி வருகின்றது. ஆனால் இயேசு ஏழைகளையே அதிகம் நேசித்தார்.ஏழ்மை உள்ளங் கொண்டவர்களே விண்ணரசுக்கு உரிமையானவர்கள் என்று மொழிந்தார். துயருறுவோர்,கனிவுடையோர்

## பரமபிதா காட்டிய பாதை

நீதியை நிலைநாட்டும் வேட்கை கொண்டோர்.இரக்கமுடையோர், தூய்மையான உள்ளத்தோர், நீதியின் பொருட்டு துன்புறுவோர் அமைதியை ஏற்படுத்துவோர் இவர்கள்தான் கடவுளின் மக்கள் எனப்படுவர்.

## நற்பண்புகளை சேகரி

கிறிஸ்தவர்களின் பெருமையும், ஞானமும் கிறிஸ்துவே. பெருமை பாராட்டுவோர் கிறிஸ்துவிலே பெருமை பாராட்டட்டும் என்று புனித பவுல் எம்மை தட்டியெழுப்புகின்றார்.கிறிஸ்துவின் அன்பும், பண்பும் எம்மிலே மலர வேண்டுமென்றால் அவரது பாதச் சுவடுகளை பின்தொடர்ந்து செல்ல வேண்டும். அப்போது அவரது அருள் துணை நிச்சயமாக எமக்குக் கிடைக்கும். தேனீக்கள் நறுந் தேனைச் சேகரிப்பதுபோல் மற்றவர்களிடம் உள்ள நற்பண்புகளை சேகரித்து நமதாக்கிக் கொள்ள நாம் முயற்சிக்கவேண்டும். பெருமையை மூன்று அறிகுறிகளால் தெரிந்து கொள்ளலாம். தோற்றத்தில் எளிமை,செயலில் இனிமையும் மனிதத் தன்மையும், வெற்றியில் வெற்றியின்மை என்று பிஸ்மாக் என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார்.

## சேவையில் அர்ப்பணிப்பு

இறை உறவிலே நாம் வாழ வேண்டுமென்றால் எம்மிலே பிறரைக் காணவேண்டும். பிறரிலே இறைவனைக் காணவேண்டும். அப்போதே கடவுளின் ஞானம் எம்மில் வெளிப்படும்.மனிதனை நேசிப்பதிலே கடவுள் நிறைவுள்ளவராக இருக்கிறார்.மனிதனும் பிறரை நேசிப்பதில் நிறைவு பெறவேண்டும். சேவையில் தன்னை அர்ப்பணிப்பவன் தான் மனிதன். அப்படித்தான் அவன் புனிதமடைகின்றான். நற்செயல்களுக்கான பயன் தாமதித்து வந்தாலும் நிச்சயம் வந்தே தீருமென்பது அனுபவம் தரும் பாடமாகும்.

மனித வாழ்வின் உயர்வானது தன்னை வெளிப்படுத்துவதில் அல்ல. தன்னைத் தியாகம் செய்வதில் தான் அடங்கியுள்ளது.

**அமல அருள்தாசன்**

இயேசு தம் உயிரைத் தியாகம் செய்து எம் பாவங்களை கழுவித் தூய்மையாக்கினார். மனுக்குலத்தை நேசிக்கும் ஒவ்வொருவரும் பல தியாகங்கள் செய்ய ஆயத்தமாக இருக்கவேண்டும். அப்போதுதான் இறையரசின் மக்களாகும் தகுதி எமக்குக் கிடைக்கும். இல்லையேல் எம் வாழ்வு போலியானதே. □

## சிரமதானம்

இம்மாதம் 27ஆம்திகதி நடைபெறவுள்ள மாவீரர் தினத்தையொட்டி பல்வேறு தரப்பட்டவர்களும-வர்த்தகர்களும் சிகை ஒப்பனை ஊழியர்களும் கடந்தவாரம் சாட்டி மாவீரர் இல்லத்தில் சிரம தானப் பணிகளை மேற்கொண்டனர். மாவீரர் அமரர் செல்வி செறீன் ஞாபகமாக அவரின் இல்லத்திலும் சிறப்பு இல்ல வழிபாடு நடைபெற்றது. (ற-72)

## சோமவாரம்

வட்டுக்கோட்டை-தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நாளை தொடக்கம் ஒவ்வொரு கார்த்திகை திங்களும் சோமவார உற்சவம் பிற்பகல் 3மணிக்கு ஆரம்பமாகி,அதனைத் தொடர்ந்து சுவாமி வீதியுலா வரும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் சர்வாலய தீப நாளாகிய எதிர்வரும் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இவ் வாலயத்தில் அடியார்கட்கு தீட்சை வழங்கும் கிரியை நடைபெறும் எனவும்,திருவெம்பாவை உற்சவம் எதிர்வரும் 4.1.2006 காலை 5மணிக்கு ஆரம்பமாகும் எனவும் ஆலயத் தொண்டர் சபைத் தலைவர் சி.கௌரிதரன் தெரிவித்துள்ளார். (அ)

# தொடங்கப்பட்டது பண்டாவால் முடிக்கப்படவுள்ளது மஹிந்தவால்

## க.வே.பாலகுமாரன் சுட்டிக்காட்டு

ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த பெற்றுள்ள வெற்றியானது தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் வெற்றிக்கு வாய்ப்பாக அமையப் போகிறது என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

புலிகளின் குரல் வானொலியின் கருத்துப் பகிர்வு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தேர்தல் எங்களுக்கு ஒரு நினைவினை மீட்டுக்கொண்டு வருகிறது. குறிப்பாக மஹிந்த தனது வெற்றி ஏற்பட்ட பிறகு தேர்தல் ஆணையாளரால் வெற்றி அறிவிக்கப்பட்ட பின்னர் '1956ஆம் ஆண்டை நினைவுபடுத்துகிறது. அன்று பண்டா வென்றதைப் போன்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது' என்று கூறியிருக்கிறார்.

உண்மையிலேயே தமிழ் பேசும் மக்களாகிய நாங்களும் இதைத்தான் கூறுகிறோம்.1956 ஆம் ஆண்டுக்கு முன்னர் பின்னர் என்று பார்த்தால் 1956 ஆண்டின் விளைவாகத்தான் தமிழர் விடுதலைப் போராட்டத்தின் கருக்கள் விதைக்கப்பட்டன.

எங்களுடைய தேசியத் தலைவரே 1958 ஆம் ஆண்டு கலவரம் பற்றியெல்லாம் கூறியிருக்கிறார். பண்டாவினது செயற்பாடு காரணமாக-சிங்களத் தேசியத்தை ஒன்றிணைத்து-பௌத்த பிக்குகளை ஒன்றிணைத்து-கட்சிகளை ஒன்றிணைத்து இப்பொழுது மஹிந்த செய்ததைப் போல அதேமாதிரியாக ஒன்றிணைத்து மிக முக்கியமான மொழிச் சிக்கலை தேசியவாத இனவெறியாக மாற்றிய போது எங்களுடைய தேசியத் தலைமை உருவாகக் காரணமாக அமைந்தது.

அதாவது,பிரபாகரன் உருவாகுவதற்கு பண்டா காரணமாக இருந்தது உண்மை.

அதுபோலவே,மஹிந்தவின் வெற்றியானது பிரபாகரனின் வெற்றிக்கான வாய்ப்பாக அமையப் போகிறது. தொடங்கப்பட்டது அந்த பண்டாவால்... முடிக்கப்பட



உள்ளது இந்த மஹிந்தவால்.

ஆகவே, பண்டா சகாப்தம் என்று மஹிந்தவும் பொருத்தமாகத்தான் கூறியிருக்கிறார்.சிங்கள மக்களுக்கு இவர் என்ன செய்யப போகிறார்? என்பதை எதிர்காலம் கூறப்போகிறது.

பலரும் கூறுவது போல் சிங்கள ஆட்சியாளர்களுக்கும் சிங்கள மக்களுக்கும் உள்ள முரண்பாடு மிகக் கூர்மையாக முற்றி இன்னொரு மிகப்பெரிய கிளர்ச்சி அல்லது கலகம் அல்லது ஊழி விபத்தாக மாறப்போகும் ஆபத்தை நோக்கி சிங்களம் செல்கிறது என்பதில் எங்களுக்கு எந்தவித சந்தேகமும் இல்லை.

அந்தவகையில் தமிழ் மக்கள தங்களுடைய பாதுகாப்பை எந்த வகையில் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் அடுத்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பதெல்லாம் மிக ஆழமாகவும் நுணுக்கமாகவும சிந்திக்க வேண்டிய கட்டத்தில் எங்கள் மக்கள் வாழ்கிறார்கள். ஆகவே இந்த அரசியலை கூர்மையாகப் பார்க்க வேண்டிய பொறுப்பு எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது எனவும் பாலகுமாரன் மேலும் தேரிவித்தார். (ற-4)

## இராசிபலன்

20. 11. 2005
(கார்த்திகை 05, ஞாயிற்றுக்கிழமை)
சதுர்த்தி முற்பகல் 08. 24மணிவரை
புனர்பூசம் முழுவதும்
இராகுகாலம் 4. 39-6. 09 மணிவரை
சுபநேரம் 9. 09-10. 39 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | பிரயாண நன்மை, தெய்வ சிந்தை, காரிய அனுகூலம், உறவினர் உதவி. |
| இடபம் | பணவிரயம், எடுத்தகாரியம் தாமதமாகும், கடினவார்த்தை, போசனசுகக்குறைவு. |
| மிதுனம் | சிந்தனை மிகுதி, தொழில் நன்மை, புதிய முயற்சி, விருந்துபசாரம். |
| கடகம் | பிரயாணம், சுபசெலவு, எடுத்தகாரியம் தாமதமாகும், சயனசுகக்குறைவு. |
| சிங்கம் | கீர்த்தி, உறவினர் கலந்துரையாடல், தெய்வசிந்தை, முயற்சி கைகூடும். |
| கன்னி | அதிகாரம், செய்தொழில் விருத்தி, புதிய தகவல், உற்சாகம். |
| துலாம் | கட்டுப்பாடு, தந்தைவழி உறவு, ரோகநிலை, இடமாற்றம். |
| விருச்சிகம் | மனச்சோர்வு, காரிய தடங்கல், தொழில் சிந்தை, வாகன பயம். |
| தனுசு | அபூர்வ சந்திப்பு, காரிய நன்மை, கடமை உணர்வு, நல்ல செய்தி. |
| மகரம் | காரிய சித்தி, நோய்குணமடைதல், போசன சுகம், தனவருவாய். |
| கும்பம் | ஆரோக்கியக்குறைவு, சொத்துப்பிணக்கு, காரிய தடங்கல், நண்பர்கள் சந்திப்பு. |
| மீனம் | கல்வியில் ஆர்வம், தாய்வழி உறவு, எடுத்த காரியம் தாமதமாகும், சுபசெலவு. |

பழைய நேரப்படி கணிக்கப்பட்டது.
- வளவன்

# ரணிலை விட மஹிந்த மிகவும் சாமர்த்தியசாலி

## -நிர்குணன் திருச்செல்வம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கெதிரான போக்கை பொறுத்தளவில் மஹிந்தராஜபக்ஷ ரணில் விக்கிரமசிங்கவை வடவும் மிகவும் சாமர்த்தியமானவர். அதுமட்டுமல்ல, ரணில் விக்கிரமசிங்கவை விடவும் மஹிந்த ராஜபக்ஷ கிராமப்புற சிங்கள மக்களுடன் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.

அத்துடன்,நீண்டகால அடிப்படையில் நிலைத்து நிற்பதற்கு அவசியமான சிங்கள மக்களின் சூழ்நிலையுடன் மஹிந்த நன்றாகப் பொருந்தியவர்.

இவ்வாறு மறைந்த நீலன் திருச்செல்வத்தின் மகனும், இலங்கை லிபரல் கட்சியின் முன்னாள் பிரதிப் பொதுச் செயலாளருமான நிர்குணன் திருச்செல்வம் கடிதம் மூலம் தனது கட்சிக்கு தெரிவித்துள்ளார்.

இவரது தந்தையாரான நீலன் திருச்செல்வம் 1981ஆம் ஆண்டின் மாவட்ட சபைகளின் உருவாக்கத்தின் பின்னணியில் இருந்து செயற்பட்டவராவர். அத்துடன் 2000 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பு திருத்தங்களின் பிரதான செயற்பாட்டாளராக பின்னணியிலிருந்து செயற்பட்டவருமாவர்.

நிர்குணன் திருச்செல்வம் தனது மாணவப் பருவத்திலிருந்து லிபரல் கட்சியின் உறுப்பினராவார். இப்பொழுது வெளிநாட்டில் பணியாற்றி வரும் இவர் இலங்கையின் அரசியலிலும்,சமாதான நடவடிக்கைகளிலும் ஈடுபாடு காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-6)



இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் "விழுதுகள்" நிறுவனத்துடன் இணைந்து யாழ்ப்பாண ஊடகவியலாளர்களுக்கு யாழ்.பஸ்ரியன் ஹோட்டலில் நடாத்திய "ஊடகமும் சமூகமும்" கருத்தரங்கை வலம்புரி ஆசிரியர் என்.சண்முகானந்தன், இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றிய வடபிராந்திய இணைப்பாளர் எ.என்.எஸ்.திருச்செல்வம் ஆகியோர் மங்களவிளக்கேற்றி ஆரம்பிப்பதையும், இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றிய நிர்வாக உறுப்பினர் எஸ்.நிக்ஸன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# பருவ மழையால் யாழ்.மாவட்டத்தில் தொற்று நோய்கள் பரவும் அபாயம்

## சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றுமாறு சுகாதாரத் திணைக்களம் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

**அண்மைக் காலமாக யாழ். மாவட்டத்தில் பெய்து வரும் கடுமையான பருவ மழையால் தொற்று நோய்கள் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. குடிநீர் நிலைகள் மாசுபட்டுள்ளன. ஈக்கள், நுளம்புகளின் பெருக்கம் அதிகரிப்பதுடன் இவை மூலம் பரவும் வயிற்றோட்டம், வயிற்றுளைவு, நெருப்புக் காய்ச்சல், செங்கமாரி, மலேரியா, டெங்கு, யப்பானிய மூளைக்காய்ச்சல் ஆகிய நோய்கள் பரவ வாய்ப்புள்ளதாக யாழ். சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் எச்சரித்துள்ளார்.**

இந் நோய்களைத் தடுக்கவும் கட்டுப் படுத்தவும் யாழ். மாவட்ட சுகாதார திணைக் களம் வைத்தியசாலைகள் மட்டத்திலும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள் மட்டத்திலும் பல நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இதேவேளை, இந்நோய்களைக் கட்டுப் படுத்த பொது மக்களின் ஒத்துழைப்பு மிக அவசியம். எனவே, இதற்கான நடவடிக்கைகளுக்கு பொது மக்கள் தமது ஒத்து ழைப்பை நல்க வேண்டுமென சுகாதார திணைக்களம் கேட்டுள்ளது.

இது தொடர்பில் பொதுமக்களுக்கு விடுக் கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள்,

★ கொதித்து ஆறிய நீரை மட்டுமே பருக வேண்டும்.

★ குடிநீருக்கு பாவிக்கும் நீர் நிலைகளுக்கு கிரமமாக குளோரின் இடுதல்.

★ உங்கள் வீடுகளில் உள்ள நுளம்பு உற்பத்தியாகக் கூடிய சிறிய நீர்க் கொள்கலன்களை அழித்தல்.

★ உங்கள் வீடுகளிலும்,பொது இடங்களிலும் தண்ணீர் தேங்கி நிற்காது வழிந்தோட ஏற்பாடு செய்தல்.

★ சாப்பிட முன்பும்,சமைக்க முன்பும் ,மலம் கழித்த பின்பும் சவர்க்காரமிட்டு நன்றாகக் கை கழுவுதல்.

★ மலங்கழிக்க மலக் கூடங்களையே பாவித்தல்.சிறுவர்களின் மலங்களையும் மலக் குழிக்குள் இடுதல் அல்லது புதைத்தல் சமைத்த உணவை ஈக்கள் மொய்க்காது பாதுகாப்பாக மூடி வைத்தல்.சமைத்த உணவை காலம் தாழ்த்தி சாப்பிடும்போது மீண்டும் சூடாக்கி உண்ணுதல்.

★ வீதியோரங்களில் சுகாதாரமற்ற முறையில் விற்கப்படும் உணவுப் பொருட்களையும், பானங்களையும் தவிர்த்தல்.

★பச்சையாக உண்ணும் காய்கறிகளையும், பழங்களையும் நன்றாக கழுவிய பின் உட்கொள்ளல்.

★ உங்கள் வீட்டிலும், கிராமத்திலும் குப்பை கூளங்களை உரிய முறையில் அகற்றல்.

★ உங்கள் பகுதியிலுள்ள உணவகங்கள் சுகாதாரமற்ற முறையில் காணப்பட்டால் அவ்வப் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு அல்லது சுகாதார வைத்திய அதிகாரிக்கு உடன் அறிவிக்கவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

★ நுளம்புக் கடியிலிருந்து விடுபட நுளம்பு வலை போன்ற தற்காப்பு முறைகளைப் பாவிக்கவும்.

★ நோய் அறிகுறிகள் ஏற்பட்டால் உடனடியாக தகுந்த வைத்திய ஆலோசனையை நாடுங்கள்.

★ பொது இடங்களில் சுகாதாரத்தைப் பேண சமூக அமைப்புக்கள் சிரமதான அடிப் படையில் சுத்தம் செய்யும் நடவடிக்கைகளை ஏற்பாடு செய்யவேண்டும்.

★ உங்கள் வீட்டையும், கிராமத்தையும் துப்புரவாக வைத்திருப்பதன் மூலம் உங்கள் குடும்பத்தினரையும், உற்றார் உறவினர், நண்பர்களையும் இந் நோய்களிலிருந்து காப்பாற்றலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ற)

## தென்னிலங்கை அரசியல் சக்திகளுடன் உடன்பாட்டை ஏற்படுத்துவார் மஹிந்த

### -அமைச்சர் மங்கள

(கொழும்பு)

தெற்கில் உள்ள அரசியல் சக்திகளுடன் பொது உடன்பாடு ஒன்றுக்கு வர ஐந்தாவது நிறைவேற்று ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷ முயற்சிகளை மேற்கொள்வார் என மஹிந்தவின் தேர்தல் பிரசார ஒருங்கிணைப்பாளரும் அமைச்சருமாகிய மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அதன்பின்னர் எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்போம் இந்தத் தேர்தல் வெற்றியானது. மஹிந்தவின் சிந்தனைக்கு- சமூக ஜனநாயகத்துக்கு கிடைத்த பெரு வெற்றியாகும்.

இதில் ஏற்பட்ட தோல்வி ஐக்கிய தேசியக்கட்சியின் தோல்வியல்ல மாறாக ரணிலின் கொள்கைகளுக்கு அதாவது அவரின் தானமயமாக்கல் கொள்கைகளுக்கு ஏற்பட்ட படுதோல்வியாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ற-4)

## கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வளப்பற்றாக்குறை பணிப்பாளர் விசனம்

(கொழும்பு)

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தினந்தோறும் அனுமதிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப சிகிச்சைகளை வழங்குவதில் சிக்கல்கள் தோன்றியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிமாவட்ட வைத்தியசாலைகளிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக நாளாந்தம் நோயாளிகள் கொழும்பு தேசிய வைத்திய சாலைக்கு மாற்றப்படுவதன் காரணமாக இந்தநிலை தோன்றுவதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் கெட்ரர் வீரசிங்க தெரிவித்தார்.

நாளாந்தம் சுமார் 600 நோயாளிகள் வெளிமாவட்ட வைத்தியசாலைகளில் இருந்து கொழும்பு தேசிய வைத் தியசாலைக்கு மேலதிக சிகிச்சைகளுக்காக மாற்றப்படுகிறார்கள்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் உள்ள 80 வாட்டுக்களில் 3 ஆயிரம் கட் டில்கள் இருக்கின்றபோதிலும் நாளாந்தம் அனுமதிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கைக்கு ஈடுகொடுக்கும் அளவிற்கு அது போதுமானதாக இல்லை என்றும் பணிப்பாளர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் தாதியர்களுக்கும் பற்றாக்குறை நிலவுவதாக குறிப்பிட்ட பணிப்பாளர் இந்த குறைபாடுகள் தொடர்பாக பல சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் உரிய பலன் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார். (அ-9)

## 'தேர்தல் வன்முறை' இறுதி அறிக்கை ஒரு மாதத்திற்குள் வெளியிடப்படும்

### -பவ்ரல் அமைப்பு அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரான வன்முறைச் சம்பவங்கள் குறித்து தாம் தொடர்ந்தும் கண்காணித்து வருவதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் இருவார காலத்திற்கு இக் கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடரும் என்றும் அந்த அமைப்பின் தலைவர் கிங்ஸ்ஸி ரொட்றிக்கோ தெரிவித்துள்ளார்.

சில பகுதிகளில் தேர்தலுக்குப் பின்னர் வன்முறைச் சம்வங்கள் இடம்பெற்றிருப்பதாக தமக்கு தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.


இதேவேளை, நடைபெற்று முடித்த ஜனாதிபதித்தேர்தல் கண் காணிப்பு தொடர்பான இறுதி அறிக்கை ஒருமாத காலத்திற்குள் வெளியிடப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் தங்கியிருந்து தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்ட கண்காணிப்பாளர்களால் தயாரிக்கப்பட்ட அறிக்கையின் உள்ளடக்கங்கள் விரிவாக ஆராயப்படும்.

தேர்தல் கண்காணிப்புக் குறித்த பவ்ரல் அமைப்பின் இறுதி அறிக்கையில் நடமாடும் கண்காணிப்பாளர்களின் 450 அறிக்கைகளும் சர்வதேச கண்காணிப்பாளர்களின் 110 அறிக்கைகளும் உள்ளடக்கப்படுமென்றும், அந்த அறிக்கையின் உள்ளடக்கங்கள் அமைப்பின் தலைவரினால் வெளியிடப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-9)



வடமராட்சி லயன்ஸ் கழக வெள்ளைப் பிரம்பு தின விழாவில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் எஸ்.சேதுராஜா உரையாற்றுவதையும், கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் , லயன்ஸ் கழகத் தலைவர் வி.சிவகுமாரன், கரவெட்டி தபால் அதிபர் எஸ்.பரநிருபசிங்கம் உட்பட லயன்ஸ் கழக உறுப்பினர்களையும், விழாவில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பருத்தித்துறை நிருபர்)

# இன்று ஒரு தகவல்

## அனுசரித்துப் போவது எப்படி?

சில பேரைப் பற்றி இப்படிச் சொல்வது உண்டு ."அடுத்தவர்களை அனுசரித்து நடந்துகொள்ளத்தெரியவில்லை. அவன் என்ன என்று தெரியவில்லை... அவன் என்ன சார் மனிதன்?" என்பார்கள். சகமனிதர்களுடன் எப்படிப்பழக வேண்டும் என்று தெரியாததனாலேயே... பல பேர் இன்று சங்கடப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.வசதி வாய்ப்புகள் இருந்தும் வாழ்க்கை சரியாக இருக்காது.இன்னொருவரிடம் எப்படிப் பேசுவது பழகுவது என்று தெரியாததனால்தான் இந்த அவஸ்தை சரி.. இந்த அவஸ்தைகளில்லாமல் வாழ்வது எப்படி? இதற்கு அனுபவசாலிகள் சில வழி முறைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அவையெல்லாம் என்னென்னவென்பதைப் பற்றி இப்போது தெரிந்து கொள்வோம்.

முதலில் நமது நாக்கு நமது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். வார்த்தைகளைக் கொட்டிவிட்டு அதன் பின் அள்ளமுடியாமல் கிடந்து கஷ்ப்படக் கூடாது. எப்படி பேசுகிறோம் என்பது முக்கியம்.. பேசும்போது-எப்படி முகத்தை வைத்திருக்கிறோம் என்பதும் முக்கியம். அன்பாகப் பேசினாலும் நன்றாக இருக்கும் .அப்படிப் பேசும்போது ஆதரவாக அவரது தோள்மீது ஒரு கையைப் போட்டுப் பேசினால் இன்னும் நன்றாக இருக்கும்.

இரண்டாவது விடயம். இன்னொருவரிடம் பேசும் போது வாக்குறுதிகளை அள்ளி வீசக் கூடாது .கொடுக்கும் வாக்குறுதிகள் குறைவாக இருக்க வேண்டும். அப்படிக் கொடுத்த வாக்குறுதியைக் கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டும். நாம் ஒருவரைப் பாராட்டுகிறோம் அல்லது... அவரைப் பற்றி அபிப்பிராயம் சொல்கிறோம் என்றால் அது ஆக்கபூர்வமாக இருக்க வேண்டும். நமது பாராட்டு அல்லது விமர்சனம் அடுத்தவரது முன்னேற்றத்திற்கு உதவுவது போல் இருக்க வேண்டும். நாம் கூறுவதைக் கேட்டுவட்டு அவன் தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விடக்கூடாது.

எப்போதும் உற்சாகமாக இருக்க வேண்டும்... முகம் மலர்ச்சியாக இருக்க வேண்டும். மனிதன் என்று இருந்தால் வருத்தம், கவலை, ஏமாற்றம் எல்லாம் இருக்கத் தான் செய்யும்...அதெல்லாம் மனதில் இருக்கட்டும் அந்த வருத்தமும்-கவலையும் ஏமாற்றமும் சேர்ந்து கொண்டு நமது முகத்திலிருக்கும் மலர்ச்சியை மூடிமறைக்க இடம்கொடுக்கக் கூடாது. எந்த விடயத்தைப் பற்றியாரிடம் பேசினாலும் வெளிப்படையாகப் பேசவேண்டும்... திறந்த மனதோடு பேச வேண்டும். மூடிமறைத்துமென்று விழுங்கிக்கொண்டிருக்கக்கூடாது.

இன்னொருவரிடம் பேசும்போது விவாதம் செய்யுங்கள் அது தவறில்லை... ஆனால் வாதாடிக்கொண்டிருக்காதீர்கள். அதாவது **Discuss** பண்ணலாம்... **Argue** பண்ணக்கூடாது நம்மிடம் உள்ள நல்ல குணங்களை நாம் எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கக்கூடாது... அந்த நல்ல குணங்களே நம்மைப்பற்றி எடுத்துச் சொல்ல வேண்டும். அது போல் நடக்க வேண்டும். அதே.போல் அடுத்தவர்களிடமுள்ள கெட்ட குணங் களைப் பற்றி நாம் அவசியம் பேசவேண்டியதில்லை.

. உங்களைப் பற்றியாராவது தவறாகப் பேசுகிறார்களா....? அப்படி அவர்கள் பேசுவதில் உண்மை இல்லையா? அப்படியென்றால் அதை நீங்கள் பொருட் படுத்த வேண்டாம் விட்டு விடுங்கள் அது தானாகப் போய் விடும். நான்கைந்து பேருடன் பேசிக்கொண்டிருக்கிறீர்களா? எல்லோருக்கும் முக்கியத்துவம் கொடுங்கள்! யாரையும் அலட்சியப்படுத்தாதீர்கள்... தமாஷாகப் பேசலாம் ஆனால் உங்கள் தமாஷ் அடுத்தவர்களைக் கேலி செய்வதாக இருக்கக் கூடாது.

நமக்குக் கிடைக்க வேண்டியது கிடைக்கவில்லையே என்ற தவிப்பு நம்மிடமிருக்கக்கூடாது. அதுதேவையில்லை. உங்களுடைய செயற்பாடுகள் தெளிவாக இருக்கட்டும் பாராட்டு தானாக உங்களைத் தேடிக் கொண்டு வரும். இன்னொரு மனிதனுடைய மனதில் கௌரவமான ஒரு இடத்தைப் பிடிக்க வேண்டுமென்றால் நாம் இந்தக் குணங்களை நம்மிடம் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

இதெல்லாம் அனுபவசாலிகள் சொல்லியிருக்கும் குறிப்புகள். இந்த குறிப்புகளை நாம் சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும். அது முக்கியம் தவறாகப் புரிந்து கொண்டால் என்ன ஆகும் தெரியுமா? இதைக் கேளுங்கள்.

ஒருவர் வந்தார் "சார் அடுத்தவர்களின் தோள் மீது கையைப் போட்டுக்கொண்டு அன்பாகப் பேசவேண்டும் என்றீர்கள். அப்படித்தான் பேசினேன் அவரது முதுகைக் கூட தட்டிக்கொடுத்தேன் என் வேலை போய் விட்டது சார் வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள்"என்றார்."யாரிடம் அப்படிப் பேசினீர்கள்?" என்று கேட்டேன். "என் முதலாளியிடம் சார்" என்கிறார் மிகவும் சோகமாக.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மஹிந்தவின் வெற்றியால் நாட்டில் யுத்தம் வெடிக்கும் அபாயம் -எரிக்

(கொழும்பு)

மஹிந்த ராஜபக்ஷ தேர்தலில் வெற்றி பெற்றிருப்பதால் இலங்கையில் வன்முறைகள் வெடிக்கும் அபாயம் உள்ளதாக நோர்வே அபிவிருத்தி அமைச்சரும் இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவருமான எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

நோர்வே வானொலி ஒன்றுக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இலங்கையில் நிலைமை இப்போது மிகவும் சிக்கலானதாக இருக்கிறது.

இலங்கையின் முக்கிய பகுதிகளில் கட்டுப்படுத்த இயலாத வன்முறைகள் வெடிக்கக் கூடிய அபாயம் உள்ளது என்றும் கூறிய எரிக், முடங்கிக் கிடக்கும் அமைதிப் பேச்சுகளை மீளத் தொடங்குவதற்காக விரைவில் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணித்திருப்பதன் மூலம் நிலைமை மிக மிக மோசமடைந்து இருக்கிறது என்றும் சொல் ஹெய்ம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் உள் நாட்டு யுத்தம் மீண்டும் வெடிக்கும் அபாயம் இருப்பதாக அரசியல் நோக்கர் ஒருவர் கருத்துத் தெரிவித்ததாக ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனமும் எச்சரிக்கை விடுத்துள்ளது. (ற-4)

# தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை உடனடியாக அங்கீகரிக்கப்பட வேண்டும்

## -மஹிந்தவுக்கான செய்தியில் யாழ். மாவட்ட உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம்

(யாழ்ப்பாணம்)

தாயகம்,தேசியம், தன்னாட்சி உரிமை உடனடியாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என யாழ். மாவட்ட உயர்கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அவ் அமையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சிங்கள மக்களின் தலைமையைத் தெரிவு செய்யும் நோக்கில் இடம்பெற்ற ஸ்ரீலங்காவின் ஐந்தாவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணிப்பதாக எடுத்துக் கொண்ட தீர்மானத்திற்கு ஏற்ப பல்வேறு பொது அமைப்புகளும் இத் தேர்தலைப் புறக்கணிக்குமாறு செய்திகளை வெளியிட்டனர்.

இதனூடாக கடந்த 17ஆம் திகதி தமிழ்மக்களின் ஒற்றுமையையும் பலத்தினையும் மீண்டும் ஸ்ரீலங்கா பேரினவாதிகளுக்கும் சர்வதேசத்திற்கும் உணர்த்தியுள்ளோம்.

தென்னிலங்கை அரசியல் வாதிகள் இன்று அதிர்ச்சிக்குள்ளாகியிருக்கும் இவ்வேளையில், நிச்சயமாக சர்வதேசமும் எமது மக்கள் சிங்களத் தலைமையையோ அல்லது தென்னிலங்கை அரசியலையோ இனியும் நம்பி ஏமாறத் தயாரில்லை என்பதையும் புரிந்து கெண்டிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

புதிய ஜனாதிபதியோ அல்லது சிங்களப் பேரினவாதிகளோ தமிழ் மக்களாகிய எமது தாயகம்,தேசியம், தன்னாட்சி உரிமை என்பவற்றை ஏற்றுக் கொள்ள மறுக்குமாக இருந்தால் தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் எமது உரிமைகளைப் பெற் றெடுப்பதற்காக வேறு வழியின்றி மீண்டும் எமது உரிமைக்கான போரைத் தொடங்குவதற்கு எந்த நேரமும் தயாராக இருக்கிறோம் என்பதை புதிதாகப்பதவி ஏற்கவுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்குத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

இனி வரும் காலங்களிலும் எமது விடுதலைக்கான காலத்தை நீட்டிச் செல்ல நாம் தயாரில்லை. நாகரீகமான, கௌரவமான மனித வாழ்வையே நாம் விரும்புகின்றோம். தொடர்ந்தும் எமது மக்கள் இராணுவ ஆக்கிரமிப்பினுள் வாழ்வதற்குத் தயாரில்லை. அவ்வாறு இராணுவப் பாதுகாப்பு,எமது இனத்தை காட்டிக் கொடுத்து இன மானத்தை விற்று அரசியல் நடாத்துபவர்களுக்கே இது தேவைப்படுமென எண்ணுகின்றோம்.

நாம் புதிய ஜனாதிபதிக்குச் சொல்ல விரும்புவது எமது மண்ணை ஆக்கிரமித்து நிற்கும் சிங்கள ஆக்கிரமிப்புப் படையை உடனடியாக இங்கிருந்து அகற்றி எமது மக்களின் இயல்பு வாழ்விற்கு வழிவிட வேண்டும். மாறாக எமது மண்ணை இராணுவம் தொடர்ந்தும் ஆக்கிரமித்து இருக்குமானால் விளைவுகள் விபரீதமானவையாகவே இருக்கும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

## மழை நீர் உட்புகுந்ததால்

# இடைத் தங்கல் முகாம்களை விட்டு மக்கள் வெளியேற்றம்

## .உதவிகளை வழங்குமாறு கோரிக்கை

(திருநெல்வேலி)

.வடமராட்சியில் தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழை காரணமாக சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியிருந்த இடைத்தங்கல் முகாம்களைச் சூழ வெள்ளம் தேங்கி உள்ளதுடன் முகாம்களுக்குள்ளும் மழை நீர் உட்புகுந்துள்ளது.

இதனால் மாமுனை, செம்பியன்பற்று,தாளையடி, வத்திராயன் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தாம் வாழ்ந்த இடைத்தங்கல் முகாம்களை விட்டு வெளியேறி பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களுக்கு தமிழர் புனர்வாழ்வு நிறுவனம் மட்டுமே உதவிகளை வழங்கியுள்ளது. இதனால் இம் மக்களுக்கு உதவி வழங்க தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் முன்வரவேண்டும் என்று பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ் விடயம் தொடர்பாக அவசர சுகாதாரப் பொதிகளை வழங்க யாழ்ப்பாணத்திலுள்ள செஞ்சிலுவைச் சங்கம் முன்வரவேண்டும் என்று இப்பகுதி பொது அமைப்புக்கள் வலியுறுத்தியுள்ளன. (ற-43)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை இந்து மன்றக் கலை விழாவில் உப தலைவர் செல்வி எஸ். சங்கீதா, செயலாளர் செல்வி ஆர். கஜப்பிரியா ஆகியோர் உரையாற்றுவதையும் அதிபர் திருமதி எஸ். சுந்தரேசன் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படம்:- பருத்தித்துறை நிருபர்)

# பின்தங்கிய கிராமப்புறங்களில் புதிய பஸ் சேவைகள் நடத்தப்படும்

(கொழும்பு)

பின்தங்கிய கிராமப்புறங்களில் புதிய பஸ் சேவைகளை ஆரம்பிப்பதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு ஆலோசித்து வருகிறது.

'கிராமியப் பயணம்' என்ற பெயரில் இந்த பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் முதல்கட்டமாக 100 பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஆலோசகர் எல்.ஜி.தசநாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்கான ஒத்துழைப்பை தனியார் பஸ் உரிமையாளர்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ளவிருப்பதாக அவர் கூறினார்.

பின்தங்கிய கிராமங்களில் சேவையில் ஈடுபடும் பஸ் வண்டி உரிமையாளர்கள் உரிய இலாபம் ஈட்டும் வரை நிவாரணக் கொடுப்பனவு ஒன்றை வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் தேசிய போக்குவரத்து ஆணைககுழு தெரிவித்துள்ளது.

இந்தக் கொடுப்பனவு 3 வருடங்களுக்கு வழங்கப்படவுள்ளது. இதேவேளை, இரவு வேளைகளிலும், அதிகாலை வேளையிலும் புதிய பஸ் சேவைகளை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த பஸ் சேவைகள் பிரதான வீதிகளில் நடாத்தப்படவுள்ளது. இந்த சேவைகளில் ஈடுபடும் பஸ் வண்டிகள் ஆரம்ப மற்றும் இறுதி சேவைகளை கட்டாயமாக நடத்தவேண்டும் எனவும் அதற்கு நிவாரணக் கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-7)

# கிளின்டன் நவ. 29இல் இலங்கை வருகிறார்

(கொழும்பு)

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியும், ஆழிப்பேரலை அனர்த்த முகாமைத்துவ ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதியுமான பில் கிளின்டன் எதிர்வரும 29ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இதன்போது அவர் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட இடங்களைச் சென்று பார்வையிடவுள்ளார்.

இந்தோனேஷியாவில் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்படட இடங்களைப் பார்வையிட விஜயம் செய்யும் கிளின்டன் அதன் தொடராகவே இலங்கைக்கும் விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

ஏற்கனவே இலங்கைக்கு விஜயம் செய்திருந்த அவர் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களைத் தவிர்ந்த ஏனைய ஆழிப்பேரலை அனர்த்தப் பிரதேசங்களைப் சென்று பார்வையிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-7)

# மலேரியாவைக் கட்டுப்படுத்த புதிய 'பங்கசு' கண்டுபிடிப்பு

(கொழும்பு)

மலேரியா நோயைக் கட்டுப்படுத்தக்கூடிய பங்கசு ஒன்றை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

இந்தப் பங்கசு கிழக்கு ஆபிரிக்காவை தாயகமாகக் கொண்டிருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

நெதர்லாந்து, தன்சானியா, பிரிட்டன் ஆகிய நாடுகளின் மருத்துவ விஞ்ஞானிகள் மேற்கொணட ஆய்வின் போது இந்தப் பங்கசு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மலேரியாநோயைத் தோற்றுவிக்கும் நுளம்புகளைத் துரிதமாக உயிரிழக்கச் செய்யும் ஆற்றல் இந்தப் பங்கசிடம் இருப்பதாகவும் அவ் விஞ்ஞானிகள் குறிப்பிடடுள்ளனர். (ந-7)

# இலவச கண் பரிசோதனை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகம நடாத்தும் இலவச மருத்துவ முகாமில் இன்று ஞாயிற்றுக் கிழமை 8.30 ம்ணி முதல் 1.30 மணிவரை கச்சாய் அரசினா் தமிழ் கலவன் பாடசாலையில் பிரபல கண் சத்திர சிகிச்சை நிபுணா் டாக்டர் குகதாஸன் தலைமையில் கண் பரிசோதனை இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில்,பிரதம விருந்தினராக மீள்குடியேற்ற புனா்வாழ்வு மாவட்டத் தலைவர் லயன் எஸ்.கே.நவரத்தினமும், சிறப்பு விருந்தினராக கச்சாய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபா க.மங்களேஸ்வரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து யாழ்.போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்திய குழாமினால் பொது வைத்தியப் பரிசோதனை, இரத்த அழுத்த பரிசோதனை, நீரிழிவுப் பரிசோதனை, சர்மவியாதிக்கான பரிசோதனை என்பன இடம்பெறவுள்ளன. (ந-108)

# நிரந்தர வீடுகள் கையளிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேசத்தில் தும்பளை கிழக்கு கிராமத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 18 குடும்பங்களுக்கு போரூட் நிறுவனத்தால் நிர்மாணிக்கப்பட்ட 18 நிரந்தர வீடுகள் சம்பிரதாய பூர்வமாக யாழ்ப்பாண அரசாங்க அதிபர் கே.கணேஷினால் உரியவர்களுக்கு கையளிக்கப்பட்டன.

பருத்தித்துறை தும்பளை உதய் சூரியன் மீனவா் சங்கம் இந் நிரந்தர வடுகளைக் கையளிப்பதற்கான நடவடிக்கைகளை ஒழுங்கு செய்திருந்தது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாண அரசாங்க அதுபா் கே.கணேஷ் பிர தம விருந்தினராகக் கலந்துகொண்டு மங்கள விளக்கேற்றி வடுகளைக் கையளித்து வைத்தாா்.

போரூட் நிறுவன இலங்கை வதிவிடப் பிரதிநிதி ரோ.சொக்கணஸ், திட்டப்பணிப்பாளர் எம்.எவ்.மரக்கா் , வடமராட்சி வடக்கு பிரதேச செயலா் ஆா்.வரதீஸ்வரன், யாழ்.அகதிகள் புனா்வாழவு கழகப் பணிப்பாளர் எஸ்.தேவானந்தா உட்பட இன்னும் பலா் கலந்து கொண்டனர். (த-52)

## திறப்பு விழா

ஏழாலை கனகசபை சனசமூக நிலையத்தின் திறப்பு விழா நேற்றுக்காலை 10.00 மணிக்கு சனசமூக நிலையத்தின் தலைவர் தவப்பிரகாசம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சனசமூக நிலையத்தின் அரம்ப கர்த்தாவான சிவகுரு - அருளம்பலத்தின் திருவுருவப் படத்தினை பிரதம விருந்தினரான பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதி ராசா திரைநீக்கம் செய்துவைததாா்.

தொடா்ந்து பாராளுமன்ற உறுப்பினரின் உரை இடம்பெற்றது. இறுதியில் நிலையத்தின் காரியதரிசி கோபாலசுந்தரத்தின் நன்றியுரை இடம்பெற்றது. (ந-33)


CARITAS - HUDEC - JAFFNA

# VACANCY

## 1.Field Officers (Construction)

Base Station: Mullaitivu (2 Positions)

### Main Duties:

* Assist in all construction activities & give regular information to the Field Coordinator. and provides detailed and exhaustive news of the evolution of operations.
* In collaboration with the administration to collect all the documents needed to establish the final reports to Caritas SEDEC (Purchase Orders, Goods Received Notes, Quotations, Travelling claims details...) for construction.
* In case of emergency, the Field Officer can negotiate with the suppliers and found a solution about the programme supplies.
* Manage the skilled labour (masons, carpenters etc.).

### Requirements:

* NCT in Civil Engineering or equivalent with 2 years experience in the same field.
* Experience in implementation, monitoring and Evaluating.
* Strong interpersonal and liaison skills.
* Computer literacy in WinWorld, Excel and e- mail software.
* Experience in preparing Monthly Progress Activity Report and Sites Advancement Report.
* Good team player.
* Fluency in Tamil & English.

## 2.Logistic Officer

Base Station: Vanni (1 Position)

### Main Duties:

* Plan & Manage all activities related to transportation & storage of materials & equipment as necessary for program implementation.
* Assist the Purchasing Officer in preparing tender documents & receipt of quotation as necessary.
* Management of labor, transport, storage & distribution of all materials necessary for Program implementation according to Caritas Sri Lanka guidelines.
* Manage & Maintain the warehouse according to professional standards & Hudec/ Caritas guidelines.
* Ensure all procedure regarding the warehouse.

### Requirements:

* Have excellent knowledge in Logistic field with 2 years experience.
* Strong interpersonal and liaison skills.
* Computer literacy in WinWord, Excel and e -mail software.
* Planning and monitoring Logistics items.
* Knowledge in the contract and supplying of stock.
* Fluency in Tamil & English

## 3.Livelihood Officer

Base Station: Mullaitivu (1 Position)

### Main Duties:

* Ensure a high level of program quality in livelihood project design, implementation, monitoring and evaluating.
* Ensure distribution of goods to selected beneficiaries.
* Be in contact with the beneficiares.
* Organize training & workshops to build & improve capacities of the above mentioned staff.
* Work with project officers to regularly monitor & evaluate livelihood programs (fisheries, agricuture, small enterprises).

### Requirements:


* Demonstrate management experience with a special emphasis on project management related to micro- enterprise and income generating activities.
* Experience using word processors, spread sheets & e - mail.
* Knowledge & experience working with participatory approach.
* Demonstrated knowledge in agriculture, fisheries & small enterprises sector.
* Fluency in Tamil & English.
* Professionalism, Integrity, Interpersonal skills, goal focus.
* Good communication skills.

Caritas - Hudec recruits qualified individuals without distinction of ethnic background, religion or gender.
If you would like to be a part of dedicated team in a humanitarian context, Please send us your CV & motivation letter including your contacts & minimal two references to the following address, latest by 30 November 2005

Father Jeyakumar
Caritas- Hudec
14 Mathew's Road, Deogu Street, or E-mail: hudec@sltnet.lk
Jaffna.

PLEASE SPECIFY THE POST YOU APPLY FOR IN YOUR APPLICATION WITH CONTACT TELEPHONE NUMBERS

(9978)



'டிஸ்ஜூம்'
ஜீவா – சந்தியா

# ரஜினியுடன் நடிப்பது மிகப்பெரிய அதிர்ஷ்டம்

## –ஸ்ரேயா சொல்கிறார்



'ஏ.வி.எம். நிறுவனம் தயாரிக்கும் 'சிவாஜி' படத்தில் ரஜினி ஜோடியாக நடிப்பதன் மூலம் சினிமா ரசிகர்களிடம் பரபரப்பை ஏற்படுத்தியிருப்பவர் ஸ்ரேயா. 'ரஜினியுடன் நடிப்பது மிகப்பெரிய அதிர்ஷ்டம்' என்று கூறும் ஸ்ரேயா இன்னும் சொல்கிறார்...

'நான் 21 படங்களில் நடித்திருக்கிறேன். பெரும்பாலானவை தெலுங்குப் படங்கள். நான் பிறந்த இடம் டெல்லி. பி.ஏ. ஆங்கில இலக்கியம் படித்திருக்கிறேன். எனது நண்பர் மூலம் 'மாடலிங்'கில் அறிமுகம் ஆனேன். என்னை இசை அல்பத்தில் நடிக்க வைக்க அவர் விரும்பினார்.

இந்த நிலையில் டைரக்டர் ராஜன் விக்ரம் என்னைத் தெலுங்குப் படத்தில் நடிக்க வைத்தார்.

இது எனக்கு திருப்பு முனையாக அமைந்தது. அந்தப் படத்தின் பெயர் 'இஸ்தம்'. எனது 2 ஆவது படம் 'சந்தோஷம்'. நாகார்ஜுனாவுடன் ஜோடி சேர்ந்து நடித்தேன். இது 'சூப்பர் ஹிட்' ஆனது.

தெலுங்கு சூப்பர் ஸ்டார் சிரஞ்சீவி உட்பட முக்கிய தெலுங்கு 'ஹீரோ'க்கள் எல்லோருடனும் நடித்துவிட்டேன். ஹிந்தியில் 'சுக்கரியா' என்ற படத்தில் நடித்து இருக்கிறேன். நான் அனுபவித்து நடித்த முதல் தமிழ்படம் 'மழை'.

தொடர்ந்து 30 நாட்கள் நனைந்து கொண்டே நடித்ததால் ஜலதோஷம் ஏற்பட்டு 3 மாதங்கள் அவதிப்பட்டேன்.

ஹிந்தியில் எனக்குப் பிடித்தவர்கள் அமிதாப்பச்சன், நஸ்ருதிஷா ஆகியோர். தமிழ் பட உலகில் எனக்கு மிகவும் பிடித்தவர் ரஜினிதான். அவரை யாருடனும் ஒப்பிட முடியாது.

நடிகைகளில் எப்போதும் எனக்குப் பிடித்தவர் ஸ்ரீதேவி. சமீபத்தில் வந்த நடிகைகளில் எனக்குப் பிடித்தவர் திரிஷா. ஹொலிவுட் படங்களில் பாச்னோ, நிக்கோல் ஜித்மான் ஆகியோரைப் பிடிக்கும்.

நான் ரஜினியின் தீவிர ரசிகை. 'சிவாஜி' படத்தில் ரஜினியுடன் நடிப்பதற்கு பலருடைய பெயர்கள் அடிபட்டன. எனக்கு அந்த அதிர்ஷ்டம் கிடைத்தது மகிழ்ச்சி அளித்தது.

சமீபத்தில் ரஜினியின் 'சந்திரமுகி' படம் பார்த்தேன். அடுத்து அவருடன் நடிக்கும் நடிகை என்ற முறையில் அதில் பல விஷயங்களைக் கற்றுக்கொண்டேன்.

உண்மையாகவே நான் மிகுந்த அதிர்ஷ்டசாலி. அவர் மிகப்பெரிய நடிகர். திறமைசாலி. அவரிடம் இருந்து இன்னும் நான் நிறையக் கற்றுக்கொள்ள வேண்டியது இருக்கிறது.

எனக்கு 'சிவாஜி' படத்தில் உள்ள பாத்திரம் குறித்து தயாரிப்பாளர் ரவிகிஷோர், சுரேஷ்பாபு ஆகியோர் மூலம் தெரிந்துகொண்டேன். அதன்பிறகு சென்னை வந்து டைரக்டர் ஷங்கரைச் சந்தித்தேன்.

ஷங்கர் இயக்கும் படங்களை நான் விரும்பிப் பார்ப்பேன். 'அந்நியன்' படத்தை 2 முறை பார்த்தேன். அவரது படங்கள் சமூகத்துக்கு நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லும் வகையில் அமைந்திருக்கும்.

டைரக்டர் ஷங்கரைச் சந்தித்து பேசிய பிறகு சிவாஜி படத்தில் நடிப்பதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டேன்.

'மழை' படத்தைப் பார்த்து என்னைத் தேர்வு செய்திருக்கிறார். எனக்கு 'சிவாஜி' படத்தில் நல்ல கதாபாத்திரம் கிடைத்துள்ளது. நமது நாட்டில் உள்ள ஒரு சில திறமையான டைரக்டர்களில் ஷங்கரும் ஒருவர்.

இவரது இயக்கத்தில் ரஜினியுடன் நடிக்க எனக்குக் கிடைத்த வாய்ப்பை மிகவும் பெருமையாகக் கருதுகிறேன் என்கிறார் ஸ்ரேயா.

## அப்பா பிள்ளை



நடிகைகளை அம்மாக்கள் அழைத்து வருவது... அம்மாவுடன் நடிகை ஒட்டிக் கொள்வது.. என்று உருவாகி இருந்த எழுதப் படாத சினிமா கொள்கை மலையேறி நீண்ட காலமாகிவிட்டது.

இப்போது நடிகைகளில் பலர் போய்பிரண்ட் தான் 'சூட்டிங் வருகிறார்கள்.

சிலர் தனியாக வந்து போகிறார்கள். இதில் அசின் வித்தியாசமானவர். அவருடைய அப்பாவுடன் தான் படப்பிடிப்புக்கு போய் வருகிறார்.

பேட்டி போட்டோ என்று எந்த விஷயமாக இருந்தாலும் அப்பாவின் அனுமதி இருந்தால்தான் அசின் ஒகே சொல்கிறார். *அப்பா பிள்ளை...*

## சூர்யா மகிழ்ச்சி



சூர்யா சொந்த சம்பாத்தியத்தில் தனது தங்கையின் திருமணத்தை நடத்த வேண்டும் என்று நீண்ட நாட்களாகவே இலட்சியத்துடன் இருந்து வந்தார்.

இப்போது தனது தங்கை திருமணத்தைப் பெற்றோருடன் சேர்ந்து சிறப்பாக நடத்தியிருக்கிறார். திருமண விருந்து உட்பட முக்கிய செலவுகள் அனைத்தையும் சூர்யா அவரது வருமானத்தில் இருந்தே செலவு செய்திருக்கிறார்.

இதனால் ஏகப்பட்ட மகிழ்ச்சியில் உள்ளார்.

## கதாநாயகனாகும் வடிவேலு

'ஜென்டில்மேன்', 'காதலன்', 'இந்தியன்', 'அந்நியன்' உள்ளிட்ட ஏராளமான வெற்றிப்படங்களை இயக்கி தனது சொந்தப்பட நிறுவனமான எஸ்.பிக்சர்ஸ் சார்பில் முதல்வன், காதல் படங்களைத் தயாரித்தவர் இயக்குனர் ஷங்கர். இவர் தனது உதவியாளர் வசந்தபாலன் இயக்கத்தில் பரத் – பசுபதி.– பாவனா எஸ்.எஸ்மியூசிக் ஷரயா நடிக்கும் 'வெயில்' படத்தை தயாரித்து வருகிறார்.

இதனைத் தொடர்ந்து முன்னணி நகைச்சுவை நடிகர் வடிவேலு கதையின் நாயகனாக நடிக்க முற்றிலும் மாறுபட்ட முழுநீள நகைச் சுவை ராஜா – ராணி கதையை பிரமாண்டமாக தயாரிக்கிறார்.

தமிழ்த்திரையுலகில் 28 வருட இடைவெளிக்குப் பிறகு 'மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்' படத்திற்கு பிறகு வரும் அரசர் கால கதை இது என்பது குறிப்பிடத்தக்கது.

'இம்சை அரசன் 23 ஆம் புலி கேசி' எனப் பெயரிடப் பட்டிருக்கும் இப்படத்தின் கதை நாயகனாக வடிவேலு நடிக்க ஜோடியாக மோனிகா – நந்திதா நடிக்கின்றனர்.

இயக்குனர் சேரனிடம் 'வெற்றிக்கொடிகட்டு', 'பாண்டவர் பூமி', 'ஆட்டோகிராப்' உள்ளிட்ட படங்களில் உதவியாளராக பணியாற்றிய சிம்புதேவன் இப்படத்தின் கதை – திரைக்கதை – வசனம் எழுதி இயக்குகிறார்.

நாகேஷ், மனோரமா, எம்.என்.ராஜம், வெண்ணிற ஆடைமூர்த்தி, நாசர், ஸ்ரீமன், இளவரசு உள்ளிட்ட பலர் நடிக்கும் இப் படத்தின் படப்பிடிப்பு இம் மாதம் பிரசாத் மற்றும் ஏவி.எம்.ஸ்டூடியோக்களில் அமைக்கப்பட்ட பிரமாண்டமான அரங்குகளில் தொடங்கி தொடர்ந்து நடைபெறுகிறது.

ஒளிப்பதிவு: ஆர்தர் ஏ.வில்சன். இசை: சபேஷ் முரளி, கலை: பி.கிருஷ்ணமூர்த்தி. எடிட்டிங்: சசிகுமார். பாடல்கள்: புலமை பித்தன் நடனம் சிவசங்கர். சண்டைப்பயிற்சி: சூப்பர் சுப்பராயன்.



சம்திங் சம்திங் உனக்கும் எனக்கும்
ஜெயம் ரவி – திரிஷா



'சண்டக்கோழி'
விஷால் – மீராஜாஸ்மின்

## சவாலுக்கு சவால்!



தமிழ்நாட்டைச் சேர்ந்த திரிஷா தெலுங்குப் பட உலகில் நம்பர் வன் ஆக இருக்கிறார். தெலுங்கில் முன்னணி இடத்தில் இருந்த ஸ்ரேயா இப்போது சூப்பர் ஸ்டார் ரஜினியுடன் ஜோடி சேர்ந்து நடிப்பதன் மூலம் தமிழில் அழுத்தமாக கால் பதிக்கிறார்.

இதே நேரத்தில் திரிஷா தெலுங்கு 'சூப்பர் ஸ்டார்' சிரஞ்சீவியுடன் 'ஸ்டாலின்' என்ற புதுப் படத்தில் ஜோடியாக நடிக்க ஒப்பந்தம் ஆகியிருக்கிறார்.

சபாஷ் சரியான இடமாற்றப் போட்டி!

# பம்பர கண்ணாலே

திரை விமர்சனம்



ஒரு சாதாரண இளைஞன் தான் விரும்பும் பெண்ணை எப்படித் தனது புத்தி சாலித்தனத்தால் கை பிடிக்கிறான் என்பதை கலகலப்பாக சொல்லும் கதை.

சென்னை அரசு குடியிருப்பை சேர்ந்த வாலிபன் ஆறுமுகம். இவன் மீது அந்தப்பகுதியைச் சேர்ந்த இளம் பெண்களுக்கு ஒரு கண். அவனை மேனா என்ற பெண் விரும்புகிறாள். இந்த நிலையில் ஆறுமுகம் ஊட்டி செல்கிறான். அங்கு பூஜாவைச் சந்திக்கிறான். அவளுக்குக் கௌதம் என்ற மாப்பிள்ளையைப் பார்த்து நிச்சயதார்த்தம் செய்கிறார்கள். அந்த மாப்பிள்ளை பிடிக்காததால் திருமணத்தை அவள் நிறுத்த விரும்புகிறாள்.

ஆறுமுகம் அவளுக்கு உதவி செய்வதற்காகத் திட்டம் போட்டு திருமணத்தை நிறுத்துகிறான். பூஜா மீது அவனுக்குக் காதல். ஆனால் அதை அவளிடம் சொல்லாமலேயே சென்னை திரும்புகிறான். பூஜா ஒரு தேர்வு எழுதுவதற்காக சென்னை வருகிறாள்.

அப்போது மீண்டும் ஆறுமுகத்தைச் சந்திக்க முயற்சி செய்கிறாள். இதை மேனா தடுக்கிறாள். இதற்கிடையே கௌதம் மிகவும் நல்லவ்னாக நடித்துப் பூஜாவைத் திருமணம் செய்ய மீண்டும் முயற்சி செய்கிறான். ஆறுமுகம் காதலில் வெற்றி பெற்றானா? யாரைக் கைபிடித்தான் என்பது மீதிக் கதை.

ஆறுமுகமாக ஸ்ரீகாந்த். முருகனின் உத்தரவு கேட்டு அதன்படி அவர் செய்யும் குறும்புகள் எல்லாம் கலகலப்பு. இளம் பெண்கள் ஒன்று சேர்ந்து ஸ்ரீகாந்தை 'டாவ்' அடிப்பது கிளுகிளுப்பு. ஒரு இடத்தில் கூட நிற்காமல் ஓடிக்கொண்டே இருக்கிறார்.

சுறுசுறுப்பைக் காட்டுவதற்காக எப்போதும் 'வள வள' வென்று பேசிக் கொண்டிருப்பது காதைக் குடைகிறது. காதலிக்காக விதம் விதமாகத் திட்டம் தீட்டி வில்லனை மடக்கும் காட்சிகள் சபாஷ். சண்டைக் காட்சிகளை யும் ரசிக்கலாம். வித்தியாசமான ஸ்ரீகாந்த்.


ஆர்த்தி அகர்வால் அழகுப் பதுமையாக வருகிறார். பூஜா என்று பொருத்தமாக பெயர் வைத்து இருக்கிறார்கள். சிரிப்பை சிந்துவதிலும், சோகத்தைப் பிழிவதிலும் தேறியிருக்கிறார். வழக்கம் போல திறந்த புத்தகமாக வருகிறார் நமீதா. இவர் ஸ்ரீகாந்த் – வடிவேலு கோஷ்டியுடன் 'கபடி' ஆடுவது கண்ணுக்குக் குளிச்சி. ஸ்ரீகாந்த் மீது ஆசைப்பட்டு சுற்றிச் சுற்றி வருவது கதைக்கு வலுச் சேர்க்கிறது.

வடிவேலு ஒரு சில காட்சிகளில் வந்தாலும் சிரிக்க வைக்கிறார். விக்ரம் ஆதித்யா, கஞ்சாகருப்பு, மதன்பாப், பாரதி, ரவி பிரகாஷ், ரவிகுமார், கிரேன்மனோகர், ஸ்ரீகுமார் உட்பட பலர் நடித்திருக்கிறார்கள். கௌதமாக வரும் வில்லன் கச்சிதம்.

கதை, திரைக்கதை, இயக்கம் பார்த்திபாஸ்கர் புதியவராக இருந்தாலும் நகைச்சுவையுடன் கதை சொல்வதில் புதிய பாணியைக் கடைப்பிடித்திருக்கிறார்.

'காமெடி' என்பதற்காக எதையாவது பேசியபடி ஸ்ரீகாந்த் ஓடிக்கொண்டே இருக்க வேண்டுமா? காட்சிகளை ரசிகர்களின் மனத்தில் பதியவைக்க இன்னும் கொஞ்சம் சிரமம் எடுத்திருக்கலாம். கதையைவிட கலகலப்புக்கு டைரக்டர் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்.

இசை: ஸ்ரீகாந்த்தேவா. ரசிக்கலாம். எஸ்.சரவணன் ஒளிப்பதிவு பளிச்.




பம்பரகண்ணாலே சலசலக்கும் நீரோடை

'அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது' படத்தை 'காதல்' படம் ரிலீஸ் ஆன அதே திகதியில் திரையிட ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

* * *

'கஜினி' பட இயக்குனர் முருகதாஸ் அடுத்து தெலுங்கில் சிரஞ்சீவி நடிக்கும் 'ஸ்டாலின்' படத்தை இயக்குகிறார்.



'நினைத்து நினைத்துப் பார்த்தேன்'
விக்ராந்த் – ஆஷிதா

## அடுத்த வேடம் தயார்



'மஜா'வைத் தொடர்ந்து தனது அடுத்த ப" டதுக்கு விக்ரம் தயார் ஆகிவிட்டார். ஒரு நேரத்தில் ஒரு படத்தில் மட்டும் நடிக்கும் கொள்கையை வைத்திருக்கும் விக்ரம் இப்போது நடிக்கப்போகும் படம் 'பீமா'.

ஏ.எம்.ரத்னம் தயாரிக்கும் இந்தப் படத்தில் விக்ரம் மீண்டும் பிரமாண்ட அதிரடி அக்ஷன் ஹீரோவாக உருமாறுகிறார். மாறுபட்ட 'கெட் – அப்'பில் தோன்ற திட்டமிட்டிருக்கிறார்.

இவருடன் பிரபல நாயகி ஜோடி சேருகிறார். அடுத்து விக்ரமுக்காக 3 படங்கள் காத்திருக்கின்றன. என்றாலும் ஒரு படத்தை முடித்துவிட்டு அடுத்த படத்தில் கால் வைத்தால்தான் படத்தில் முழு கவனம் செலுத்தமுடியும் என்கிறார் விக்ரம். *தொழில் பக்தி.*

## டைரக்டர் கார்த்திக்



குஷ்புவும் நடிகர் கார்த்திக்கும் நீண்டகால நண்பர்கள். இதன் அடிப்படையில் குஷ்புவின் பிரச்சினைக்குரிய பேச்சுக்கு கார்த்திக் ஆதரவு கொடுத்தார்.

இப்போது குஷ்புவின் ஆதரவால் கார்த்திக் டைரக்டர் ஆக இருக்கிறார். கார்த்திக் நடித்து இயக்கப்போகும் புதுப்படத்தை குஷ்பு தயாரிக்கப் போகிறாராம். ஆழமான நட்பு.

## இதுதான் சினிமா



மீராஜாஸ்மினுக்கு நடிகர் பார்த்திபன் சமீபத்தில் கதை ஒன்று சொன்னார். 'நன்றாக இருக்கிறது. என்று அதை ரசித்து கேட்ட நடிகை இதில் நடிக்க மிகவும் ஆர்வமாக இருக்கிறேன்' என்று சொல்லியிருக்கிறார்.

'கதாநாயகன் யார்' என்று கேட்க 'நான்தான்' என்று பார்த்திபன் பதில் சொன்னவுடன் 'லப் –டாப் பை' எடுத்து தட்டிப்பார்த்த மீராஜாஸ்மின் 'சாரி... கால்ஷுட் ஒத்துவராது போல இருக்கே...' என்று கைவிரித்து விட்டாராம்... இது தான் சினிமா!

# சினிமாச் சிதறல்

## ரூ.7 கோடி லாபம் சம்பாதித்த தயாரிப்பாளர்!

தீபாவளி வெளியீடாகத் திரைக்கு வந்த இரண்டெழுத்து படத்தில் தயாரிப்பாளருக்கு மட்டும் ரூ.7 கோடி லாபம் கிடைத்திருப்பதாக பேசப்படுகிறது.

வினியோகஸ்தர்களுக்கு...? அதிக லாபம் இல்லையென்றாலும் கையைக் கடிக்க வில்லை என்கிறர்கள்!

## சொன்ன மாதிரி படம் எடுப்பதில்லை

தீபாவளி ரிலீசாக வந்த இரண்டுபடங்கள் பற்றி அ... ஸ்... ன் ஒரு மலையாள பத்திரிகைக்குப் பேட்டி அளித்திருக்கிறார்.

தமிழ் பட டைரக்டர்கள் 'ஹீரோ மீது கதை சொல்வதிலேயே குறியாக இருக்கிறார்கள். சொன்ன மாதிரி படம் எடுப்பதில்லை. அப்படியே எடுத்தாலும் அதை படத்தில் வைப்பதில்லை' என்று வருத்தப்பட்டிருக்கிறார்!

* * *

*கதை பிடித்திருந்தால் புது நாயகனுடன் நடிக்கத் தயார் என்கிறார் நவ்யா நாயர்.*



'தொடாமலே'
உமா

# ICC சர்வதேச கிரிக்கெற் சபை ICC

INTERNATIONAL CRICKET COUNCIL

8

# டெஸ்ட் கிரிக்கெற் போட்டி

## முதல் போட்டியில் சதம்

| | |
|---|---|
| **பாகிஸ்தான்** | |
| கபில்ட் அப்துல்லா | 166 எதிர் அவுஸ்திரேலியா (ஹராய்ச்சி 1964/65) |
| ஜாவிட் மியாண்டட் | 163 எதிர் நியூசிலாந்து (லாகூர் 1976/77) |
| சலீம் மலிக் | 100* எதிர் இலங்கை (ஹராய்ச்சி 1981/82) |
| முஹமட் வசீம் | 109* எதிர் நியூசிலாந்து (லாகூர் 1996/97) |
| அலி நக்சி | 115 எதிர் தென்னாபிரிக்கா (ராவல்பிண்டி 1997/98) |
| அஷார் முஹமட் | 128* எதிர் தென்னாபிரிக்கா (ராவல்பிண்டி 1999/00) |
| தபீக் உமர் | 104 எதிர் பங்களாதேஷ் (முல்தான் 2001/02) |
| யசீர் ஹமீட் | 170 எதிர் பங்களாதேஷ் (ஹராய்ச்சி 2003) |
| **தென்னாபிரிக்கா** | |
| ர.கட்சன் | 163 எதிர் மேற்கிந்தியா (பிறிஜ்ரவுண் 1991/92) |
| ஹக்.றூடொல்வ் | 222* எதிர் பங்களாதேஷ் (சிற்றாகொப் 2003) |
| **இலங்கை** | |
| பிறண்டன் குரூப்பு | 201* எதிர் நியூசிலாந்து (கொழும்பு 1986/87) |
| றொமேஷ் களுவித்தாரண | 132* எதிர் அவுஸ்திரேலியா (கொழும்பு 1992) |
| திலான் சமரவீர | 103* எதிர் இந்தியா (கொழும்பு 2001) |
| **மேற்கிந்தியா** | |
| ஜி.காட்லி | 176 எதிர் இங்கிலாந்து (பிறிஜ்ரவுண் 1929/30) |
| ஏ.காண்டியூம் | 112 எதிர் இங்கிலாந்து (போர்ட் ஒவ் ஸ்பெய்ன் 1947/48) |
| வி.பெய்நாடியு | 115 எதிர் இந்தியா (போர்ட் ஒவ் ஸ்பெய்ன் 1952 /53) |
| ஓ.ஸ்மித் | 104 எதிர் அவுஸ்திரேலியா (கிங்ஷ்ரன் 1954 /55) |
| சி.கண்ரி | 142 எதிர் பாகிஸ்தான் (பிறிஜ்ரவுண் 1957 /58) |
| எல்.றோவ் | 214 எதிர் நியூசிலாந்து (கிங்ஸ்ரன் 1971 /72) |
| ஏ.கள்ளிசாறன் | 100* எதிர் நியூஸிலாந்து (ஜோர்ஜ் ரவுண் 1971 /72) |
| சி.கிறீனிச் | 107 எதிர் இந்தியா (பெங்களூர் 1974/75) |
| எல்.பாய்ச்சன் | 105* எதிர் பாகிஸ்தான் (லாகூர் 1974 /75) |
| ஏ.வில்லியம்ஸ் | 100 எதிர் அவுஸ்திரேலியா (ஜோர்ஜ்ரவுண் 1977 /78) |
| டெவின் ஸ்மித் | 105 எதிர் தென்னாபிரிக்கா (கேப்ரவுண் 2003 /04) |
| **சிம்பாப்வே** | |
| டி.ஹச்ரண் | 121 எதிர் இந்தியா (ஹராரே 1992 /93) |
| எச்.மவுகடாஷா | 119 எதிர் மேற்கிந்தியா (ஹராரே 2001) |

## துடுப்பாட்ட நிலையில் (வீரர்கள்) அதிகூடிய ஓட்டம்

| நிலை வீரர் | ஓட்டம் | போட்டி | மைதானம் |
|---|---|---|---|
| 01.எவ்.கட்டன் | 364 | இங்கிலாந்து எதிர் அவுஸ்திரேலியா | ஓவல் (1938) |
| 02.மத்தியூ ஹெய்டின் | 380 | அவுஸ்திரேலியா எதிர் சிம்பாப்வே | பேர்க் (2003/04) |
| 03.பிறைன் லாரா | 400* | மேற்கிந்தியா எதிர் இங்கிலாந்து | சென்ட்ஜோனிஸ் (2003/04) |
| 04.இன்சமாம்-உல்-ஹக் | 329 | பாகிஸ்தான் எதிர் நியூஸிலாந்து | லாகூர் (2002) |
| 05.டொன் பிரட்மன் | 304 | அவுஸ்திரேலியா எதிர் இங்கிலாந்து | லீட்ஸ் (1934) |
| 06. கே.வோல் ஹெக்ஸ் | 250 | அவுஸ்திரேலியா எதிர் நியூஸிலாந்து | கிறிஸ்ற் சேர்ஜ் (1976/77) |
| 07. டொன் பிரட்மன் | 270 | அவுஸ்திரேலியா எதிர் இங்கிலாந்து | மெல்போர்ண் (1936/37) |
| 08. வஸீம் அக்ரம் | 257 | பாகிஸ்தான் எதிர் சிம்பாப்வே | செக்கி புறா (1996/97) |
| 09.ஐ.ஸ்மித் | 173 | நியூஸிலாந்து எதிர் இந்தியா | ஒக்லாண்ட் (1989/90) |
| 10.டபிள்யூ.றீட் | 117 | இங்கிலாந்து எதிர் அவுஸ்திரேலியா | ஓவல் (1984) |
| 11. சகீர் கான் | 75 | இந்தியா எதிர் பங்களாதேஷ் | டாகா (2004/05) |

### குறைந்த (பந்து /நிமிடம்) சதம்

டெஸ்ட் கிறிக்கெற் வரலாற்றில் குறைந்த பந்துகளை எதிர்கொண்டு சதம் அடித்தவர்களும் குறைந்த நிமிடத்தில் சதம் அடித்தவர்களும் உள்ளனர்.

இதனடிப்படையில் குறைந்த பந்தில் சதம் அடித்தவர்களின் வரிசையில் மேற்கிந்திய வீரர் விவிலியன் றிச்சர்ட்ஸ் முதலிடத்தில் உள்ளார். இவர் இங்கிலாந்து அணிக்கெதிராக 56 பந்துகளை எதிர்கொண்டு சதம் அடித்தார்.

அவுஸ்திரேலிய வீரர் ஜே.கிரகரி தென்னாபிரிக்க அணிக்கெதிராக 67 பந்துகளிலும், மேற்கிந்திய வீரர் சிவநர்வன் சந்திர போல் அவுஸ்திரேலிய அணிக்கெதிராக 69 பந்துகளிலும், மேற்கிநதிய வீரர் ஆர்.பிறிடிறிக்ஸ் அவுஸ்திரேலிய அணிக்கெதிராக 71 பந்துகளிலும், இந்திய வீரர் முஹமட் ஷாருதீன் தென்னாபிரிக்க அணிக்கெதிராக 74 பந்துகளிலும், பாகிஸ்தான் வீரர் மஜிட்கான் நியூசிலாந்து அணிக்கெதிராக 74 பந்துகளிலும் இந்திய வீரர் கபில்தேவ் இலங்கை அணிக்கெதிராக 74 பந்துகளிலும் சதங்களைப் பெற்றுள்ளனர்.

இதேவேளை குறைந்த நிமிடத்தில் சதம் அடித்தவர்கள் வரிசையில், முதலிடத்தில் இருப்பவர் அவுஸ்திரேலிய வீரர் கிரகரி இவர் தென்னாபிரிக்க அணிக்கெதிராக 70 நிமிடங்களில் சதத்தினைப் பெற்றுள்ளார்.

இவருக்கு அடுத்த படியாக இங்கிலாந்து வீரர் வி.ஜெஸில் 75 நிமிடங்களிலும், அவுஸ்திரேலிய வீரர் ஆர்.போணாட் 78 நிமிடங்களிலும் தென்னாபிரிக்க வீரர் ஜே.சின்கிளேயர் 80 நிமிடங்களிலும் மேற்கிந்திய வீரர் விவிலியன் றிச்சர்ட்ஸ் 81 நிமிடங்களிலும், நியூஸிலாந்து வீரர் வி.டெய்லர் 86 நிமிடங்களிலும் சதம் அடித்து அடுத்தடுத்து உள்ளனர்.

### குறைந்த (பந்து /நிமிடம்) இரட்டைச் சதம்

நியூஸிலாந்து வீரர் நதேன் அஷ்ரில் இங்கிலாந்து அணிக்கெதிராக 153 பந்துகளை எதிர்கொண்டு இரட்டைச் சதம் அடித்ததே குறைந்த பந்தில் இரட்டைச் சதம் அடித்தவர்கள் வரிசையில் முதலாவதாக உள்ளார்.

இவருக்கு அடுத்த படியாக தென்னாபிரிக்க வீரர் கிரேம் ஸ்மித் 211 பந்துகளை எதிர்கொண்ட சதம் அடித்துள்ளார்.

அவுஸ்திரேலிய வீரர் அடம்ஸ் கில்கிறிஸ்ற் 212 பந்துகளிலும், இங்கிலாந்து வீரர் மொத்தம் 220 பந்துகளிலும், இந்திய வீரர் வீரேந்தர் சேவாக் 222 பந்துகளிலும், இலங்கை வீரர் அரவிந்த டி சில்வா 229 பந்துகளிலும் இரட்டைச் சதம் அடித்தவர்கள் வரிசையில் உள்ளனர்.

இதேவேளை குறைந்த நிமிடங்களில் இரட்டைச் சதம் அடித்தவர்கள் வரிசையில் முதலிடத்தில் உள்ளவர் டொன் பிரட்மன். இவர் இங்கிலாந்து அணிக்கெதிராக 214 நிமிடத்தில் இரட்டைச் சதம் அடித்தது இது வரை சாதனையாகவுள்ளது.

அத்துடன் இவர் 234 நிமிடங்களில் இரட் டைச் சதம் அடித்ததன் மூலம் 5 ஆம் இடத்திலும், 251,253 நிமிடங்களிலும் இரட்டைச் சதம் அடித்தன் மூலம் குறைந்த நிமிடத்தில் இரட்டைச் சதம் அடித்தவர்கள் வரிசையில் முறையே 9,10 ஆம் இடங்களில் உள்ளார்.

நியூஸிலாந்து வீரர் நதேன் அஷ்ரில் 217 நிமிடங்களிலும், அவுஸ்திரேலிய வீரர் எஸ். மகேப் 223 நிமிடங்களில் இரட்டைச் சதம் அடித்ததன் மூலம் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களில் உள்ளனர்.

### குறைந்த (நிமிடம்) முச்சதம்

இங்கிலாந்து வீரர் டபிள்யூ.ஹமொண்ட் நியூஸிலாந்து அணிக்கெதிராக 288 நிமிடங்களில் முச்சதம் அடித்துள்ளார். அத்துடன் அவுஸ்திரேலிய வீரர் டொன் பிரட்மன் இங்கிலாந்து அணிக்கெதிராக 336 நிமிடங்களில் முச்சதம் அடித்துள்ளார்.

## நோயல்

### குறைந்த (பந்து /நிமிடம்) அரைச்சதம்

### குறைந்த நிமிடம்

| | | |
|---|---|---|
| ஜே.பிறவுண் | (இங்கிலாந்து) | - 28 |
| எஸ்.துராணி | (இந்தியா) | - 29 |
| இ.வில்லியம்ஸ் | (மேற்கிந்தியா) | - 30 |
| வி.ரெய்லர் | (நியூஸிலாந்து) | - 30 |

### குறைந்த பந்து

| | |
|---|---|
| ஜக்கலிஸ் (தென்னாபிரிக்கா) | -24 |
| இயன் பொத்தம் (இங்கில்லாந்து) | - 26 |
| சஹீட் அப்ரிடி (பாகிஸ்தான்) | - 26 |
| யூசுப் யுகானா (பாகிஸ்தான்) | -27 |
| கபில்தேவ் (இந்தியா) | - 30 |
| டபிள்யூ.குரேஞ்சி (தென்னாபிரிக்கா) | - 31 |
| விவிலியன் றிச்சர்ட்ஸ் (மேற்கிந்தியா) | -32 |
| இயன் பொத்தம் (இங்கிலாந்து) | -32 |

### மிக மெதுவாக பெறப்பட்ட சதம்

மடஸ்கார் நாஷார் (பாகிஸ்தான்
- 557 நிமிடம்

டி.மக்கிலோ (தென்னாபிரிக்கா)
-545 நிமிடம்

அஸங்க குருசிங்க (இலங்கை)
-535 நிமிடம்

ஜே.குறைவ் (நியூஸிலாந்து)
-516 நிமிடம்

சஞ்சே மஞ்சேக்கர் (இந்தியா) -500 நிமிடம்

பி.றிச்சர்ட்ஸன் (இங்கிலாந்து)
- 488 நிமிடம்.


## ஒரு ஓவரில் (அதிகூடிய) ஓட்டம்

| | ஓட்டம் | பந்துவீச்சாளர் | போட்டி | மைதானம் | காலப்பகுதி |
|---|---|---|---|---|---|
| பிறைன் லாரா | 28(466444) | பீற்றர்சன் | தென்னாபிரிக்கா எதிர் மே.இந் | ஜொனெஸ்பார்க் | 2003 -04 |
| சி.மக்மிலன் | 26(444464) | யூனிஸ்கான் | நியூஸிலாந்து எதிர் பாகிஸ்தான் | ஹமில்டன் | 2000 - 01 |
| ர.றொபோட்ஸ் | 25(462661) | இயன்பொத்தம் | இங்கிலாந்து எதிர் மே.இந் | போர் ஓவ்ஸ்டபெய்ன் | 1980 -81 |
| வி.சுட்சிலிலைவ் / ஆர்.பிளெஜர் | 25 (66061) (600) | எச்.றெய்பீல்ட் | நியூஸிலாந்து எதிர் தெ.ஆபி | ஜொனெஸ்பார்க் | 1953 - 54 |
| நதேன் அஸ்ரில் / கிறிஸ்கெயில்ஸ் | 25 (6610) (41) | அன்றூ கடின் | நியூஸிலாந்து எதிர் இங்கி | கிறிஸ்றசேர்ஜ் | 2001-02 |
| ஜே.மொறிஸன் | 24 (2x6-3x4) | இம்ரான் கான் | நியூஸிலாந்து எதிர் பாகிஸ்தான் | கராஜ்ஜி | 1976-77 |
| எஸ்.பற்றில் | 24 (4440444) | வில்லிஸ் | இந்தியா எதிர் இங்கிலாந்து | மத்செஸ்ரா | 1982 |
| இயன் பொத்தம் | 24 (464604) | டி.ஸ்ரிறில்லிவ் | இங்கிலாந்து எதிர் நியூஸிலாந்து | ஓவல் | 1986 |
| கபில்தேவ் | 24 (006666) | இ.கெமிங்ஸ் | இந்தியா எதிர் இங்கிலாந்து | லோர்ட்ஸ் | 1990 |
| ஐ.ஸ்மித் | 24 (244266) | ஏ.வோஸன் | நியூஸிலாந்து எதிர் இந்தியா | ஒக்லாண்ட் | 1989 -90 |
| யூசுப் யுகானா | 24 (444426) | நிக்கிபோஜே | பாகிஸ்தான் எதிர் தெ.ஆபிரி | கேப்ரவுண் | 2002 -03 |
| கிறிஸ்கைல் | 24 (444444) | மத்தியூஹோகார்ட் | இங்கிலாந்து எதிர் மே.இந் | ஓவல் | 2004 |




இது ஒரு கனாக்காலம்.
(லாரா & விவிலயன் றிச்சர்ட்ஸ்)

## இவர்களும் சாதனையாளர்களே!



கட்டன்
HUTTON



ஹெய்டின்
HAYDEN



லாரா
LARA



இன்சமாம்
INZAMAM-UL-HAQ



பிரட்மன்
BRADMAN



வோஹெஸ்
WALTERRS



அக்ரம்
WASIM AKRAM



றீட்
W.READ



சகீர்கான்
Z.KHAN

(அடுத்த வாரம் தொடரும்...)

# பருத்தித்துறை பிரதேச சபை- புலோலி சந்தைகள் இறைச்சிக்கடைகளுக்கான

# கேள்வி அறிவித்தல் -2006

01. கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி:-28.11.2005 நண்பகல் 12.00 மணி வரை
02. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி:-29.11.2005 நண்பகல் 12.00 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி:-30.11.2005 முற்பகல் 10.00 மணி
04. கேள்வித்தொகை கேள்விப்பத்திரப்பணம் ஆகியவற்றிற்கு பெறுமதி சேர்க் கப்பட்ட வரி 15 வீதம் சேர்த்து அறவிடப்படும்.
05. ஆகக் குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்விகள் நிராகரிக்கப்படும்.
06. கேள்விப்படிவங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு அரக்கு முத் திரையிடப்பட்ட கடித உறையில் குறித்த தினத்திற்கு முன்னர் கிடைக் கக்கூடியதாக எமக்கு பதிவஞ்சலிலோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியிலோ உரிய நேரத்தில் சேர்ப்பதன் மூலம் கிடைக் கச்செய்தல் வேண்டும்.
07. இறைச்சிக்கடைக்கான கேள்விப்பத்திரம் பெறுவோர் மீளபடிவம் சமர்ப்பிக்கும் போது தகுதி வாய்ந்த இரு பிணையாளிகளின் (அரச/கூட்டுத்தாபன நிரந் தர உத்தியோகத்தர்கள்) ஒப்புதல் கடிதத்துடன் சேர்த்து சமர்ப்பித்தல் வேண்டும் (இது குத்தகை அறவீட்டில் ஏற்படும் நடைமுறைச் சிக்கலைத் தவிர்ப் பதற்காக)
08. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் படிவம் வழங்கப்படமாட்டாது எனினும் படிவம் வழங்கப்பட்டபின் இதனைக் கண்டு பிடிக்கும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
09. கேள்விப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அதன் மூலப்பிரதியை செயலாளர் பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி. என முகவரியிடப்பட்டு பதிவுத் தபால் மூலமோ அன்றி நேரடியாக தலைமை அலுவலகத்தில் குறித்த கேள்விப் பெட்டியில் இடல் வேண்டும். இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பண்ணைவீதி, யாழ்ப்பாணம்" என முகவரியிட்டு பதிவு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
10. கேள்வி நிபந்தனைகள் அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்வி கோரிக் கைகளை நிராகரிக்கும் அதிகாரம் கேள்விச் சபைக்கு உண்டு.
11. மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல | குத்தகை விபரம் | அகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் கேள்வித்தொகை | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை |
|---|---|---|---|---|
| | புலோலி உப அலுவலகம் | | | |
| 1 | மந்திகை மாட்டிறைச் சிக்கடை | 345000/- | 5000/- | 500/- |
| 2 | மானாண்டி சந்தை மாட்டிறைச்சிக்கடை | 103000/- | 3500/- | 500/- |
| 3 | மந்திகை சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 248000/- | 5000/- | 500/- |
| 4 | அல்வாய் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 21000/- | 1000/- | 500/- |
| 5 | மந்திகைச் சந்தை | 231000/- | 5000/- | 500/- |
| 6 | மானாண்டிச் சந்தை | 198000/- | 5000/- | 500/- |
| 7 | கெருடாவில் சந்தை | 1300/- | 500/- | 500/- |
| 8 | கற்கோவளம் சந்தை | 7000/- | 1000/- | 500/- |
| | குடத்தனை உப அலுவலகம் | | | |
| 1 | பொற்பதி மீன் சந்தை | 20000/- | 1000/- | 500/- |
| 2 | மணற்காடு மீன்சந்தை | 17000/- | 1000/- | 500/- |
| | செம்பியன்பற்று உப அலுவலகம் | | | |
| 1 | மருதங்கேணி சந்தை | 2000/- | 500/- | 500/- |
| 2 | தாளையடி மாட்டிறைச் சிக் கடை | 6000/- | 1000/- | 500/- |
| 3 | செம்பியன்பற்று மாட்டி றைச்சிக் கடை | 6000/- | 1000/- | 500/- |

திரு சிதம்பரப்பிள்ளை பசுபதி,
செயலாளர்,
பருத்தித்துறை பிரதேச சபை,
புலோலி.

(C/1833)

# முஸ்லிம்கள் மீதான தாக்குதலுக்கு விடுதலைப் புலிகள் கண்டனம்

(அம்பாறை)

அக்கரைப்பற்று பெரிய பள்ளி வாசலில் இருந்த அப்பாவி முஸ்லிம்கள் மீது நேற்று முன்தினம் அதிகாலை மேற்கொள்ளப்பட்ட கைக்குண் டுத் தாக்குதலுக்கு விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறை கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அம்பாறை மாவட்ட அரசியல்துறை விடுத்துள்ள கண்டன அறிக்கையில் ,

அக்கரைப் பற்று பெரியபள்ளி வாசலில் இருந்த அப்பாவி முஸ்லிம் சகோதர உறவுகள் மீது நேற்று முன்தினம் அதிகாலை 5.15 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

இத்தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன் இச் சம்பவத்தின் போது கொல்லப் பட்டவர்களுக்கும் காயப்படுத்தப்பட்டவர்களுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் கவலையையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இச் சம்பவமானது மக்கள் மத்தியில் குழப்ப நிலையை ஏற்படுத்துவதற்காகவும் குறிப்பாக தமிழ்-முஸ்லிம் இனங்களிற்கிடையேயான நட்புணர்வை சீர்குலைக்கும் ஒரு கபட நோக்கத்திற்காகவும் கைக்கூலிப் படைகளினால் திட்டமிட்டு நடாத்தப்பட்டுள்ளது.

இப்படியான திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் மூலம் சமாதான நிலைமையை மேலும் குந்தகப் படுத்துவதற்காகவும் தமிழ் பேசும் உறவுகள் மத்தியில் பிரிவினையை உருவாக்குவதற்காகவும் மறைமுகமாக செயற்பட்டுக்கொண்டிருக்கும் இத் தீய சக்திகளை நாம் இனங் கண்டுள்ளோம். உண்மைகள் விரைவில வெளிவரும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# தமிழர்கள் வாக்களிக்காதது எமக்கு ஏமாற்றமே-ஐ.தே.க

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் வாக்களிக்காதது தங்களுக்கு ஏமாற்றமே என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இது தொடர்பில் கூறுகையில்,

ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பை மதிக்கிறோம். புதிய ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மஹிந்த ராஜபக்ஷவுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

நாம் தேர்தல் முடிவுகளை ஒப்புக்கொள்கிறோம். ஆனால், வடக்கு பிரதேசத்தில் பாரிய அளவில் வாக்குப் பதிவு குறைந்திருப்பது எம்மை ஏமாற்றமடையச் செய்து விட்டது.

தேர்தலில் தமிழர்கள் வாக்களிக்காமல் ஒதுங்கியிருந்தது அடிப்படை உரிமை மீறலாகும். எமது தேர்தல் செயற்பாடுகளில் நாம் மகிழ்ச்சியடைகிறோம் என்றார். (ற)



புத்தூர் ஸ்ரீ-சோமாஸ்கந்தக் கல்லூரியின் ஆங்கில மன்றத்தால் நடத்தப்பெற்ற ஆங்கில தின விழாவின் போது மாணவர்களால் வழங்கப்பெற்ற கலைநிகழ்ச்சியொன்றின் காட்சியைப் படத்தில் காணலாம்.


## அன்பு வாசகர்களே...

உங்கள் வலம்புரியின் ஆறாவது ஆண்டின் நிறைவில் பல பக்கங்களைக்கொண்ட

### வரலாற்று ஆவணச் சிறப்பிதழ்

வெளிவரவுள்ளது.

கல்வி. மருத்துவம். உளவியல். சோதிடம். ஆன்மீகம். விஞ்ஞான ஆராய்ச்சிகள். வரலாறு. பொருளியல். சமூகவியல். அரசியல். கவின்கலை தொடர்பான பல்துறைசார் ஆக்கங்கள் இச்சிறப்பிதழில் இடம்பெறவுள்ளன.

துறைசார் அறிஞர்கள், எழுத்தாளர்கள், மாணவர்களிடம் இருந்து ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்.

உங்கள் ஆக்கங்களை

பிரதம ஆசிரியர்
வரலாற்று ஆவணச் சிறப்பிதழ்
வலம்புரி
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

நிறைவு விழாச் சபை, வலம்புரி

# அமெ.படைகளை வாபஸ் பெற்றால் ஈராக்கில் வன்முறை வெடிக்கும்

## குடியரசுக் கட்சி தெரிவிப்பு

(வோஷிங்டன்)

ஈராக்கிலிருந்து அமெரிக்க இராணுவத்தினரை வாபஸ பெறவேண்டும் என்று புஷ் அரசிற்கு அமெரிக்க ஜனநாயக கட்சி எம்.பி.கோரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர் ஜான் முர்தா.இவர் நேற்றுமுன்தினம் அமெரிக்க பாராளுமன்றில் கொண்டு வந்த தீர்மானத்தில், 'ஈராக்கில் அமெரிக்கா நடத்திய போர் பல குறைபாடுகளைக் கொண்டது. இதன்மூலம் அமெரிக்காவின் எதிர்காலம் ஆபத்தில் முடிவடைந்துவிடும்' என்று குறிப்பிட்டுள்ளார்.


ஈராக் மீது அமெரிக்கா படையெடுத்த நேரத்தில், பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடந்தபோது அதை ஆதரித்து வாக்குப் போட்டவர் ஜான முர்தா. கொரிய மற்றும் வியட்நாம் போர்களில் பங்கேற்றுள்ள ஜான் முர்தா நேற்று முன்தினம் நிருபர்களுக்கு பேட்டியளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது,

ஈராக்கில சதாம் ஆட்சியை அகற்றி விட்டு புதிய ஆட்சியை ஏற்படுத்தவேண்டும் என்ற அமெரிக்காவின் திட்டம் பூர்த்தியாகிவிட்டது. ஈராக்கில் அமெரிக்கப் படைகள் தொடர்ந்து இருப்பதனால் வன்முறையை ஊக்குவிப்பதற்கே வழிவகுக்கும்.ஈராக்கில் அமெரிக்க இராணுவத்தினர் மிகவும் துன்புறுத்தலுக்கு ஆளாகியுள்ளனர். ஈராக் போரில் இரண்டு ஆயிரத்துக்கு மேற்பட்ட வீரர்கள பலியாகியுள்ளனர். மேலும் பல ஆயிரம் வீரர்கள் படுகாயம் அடைந்துள்ளனர்.

அமெரிக்காவின் எதிர்காலம் இன்று அபாயத்தில உள்ளது. இதுபோன்ற போக்கை நாம் தொடர்ந்து கடைப்பிடிக்க முடியாது. ஈராக்கில் அமெரிக்க இராணுவத்தைத் தொடர்நது நிலைகொள்ளச் செய்வது அமெரிக்காவுக்கோ,ஈராக்கிய மக்களுக்கோ நல்லதல்ல என்றும் அவர் கூறினார்.

முர்தாவின் கோரிக்கைக்கு குடியரசுக் கட்சியினர் உடனடியாக பதிலளித்துள்ளனர். 'அமெரிக்கப படைகளை வாபஸ் பெற்றால் ஈராக்கில் வன்முறை வெடிக்கும் என்றும் ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் பின்னடைவு ஏற்படும்' என்று அவர்கள் கூறியுள்ளனர். (ற)



ஸ்பெயின் நாட்டின் பில்பாவ் நகரில் சர்க்கஸ் கலையும், நடனக் கலையும் இணைந்த 'டிராலியன்' என்ற கலை நிகழ்ச்சி நேற்று நடந்தது. ஒற்றைக் காலில் ஒரு பெண்ணைத் தாங்கி நிற்கிறார் கீழே நிற்கும் பெண்.

WORLD NEWS உலக தரிசனம்




தென்கொரியாவின் புசான் நகரில் ஆசிய பசுபிக் பொருளாதார ஒத்துழைப்பு உச்சி மாநாடு நடைபெற்று வருகிறது. இதில் 21 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கின்றனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து புசான் நகரில் நேற்று ஆர்ப்பாட்டம் நடந்தது. சரக்குப் பெட்டிகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் எரிக்கும் காட்சி.

# அமெ.-பிரிட்டிஷ் கூட்டுப் படைக்கு எதிராக ஈராக்கில் 3000 வெளிநாட்டு தீவிரவாதிகள்

(வோஷிங்டன்)

ஈராக்கில் அமெரிக்கா மற்றும் அதன் கூட்டணிப் படைகளை எதிர்த்து வெளி நாடுகளைச் சேர்ந்த 3 ஆயிரம் தீவிரவாதிகள் போரிடுகின்றனர்.

சவூதி மற்றும் இதர பிராந்திய உளவு அமைப்புத் தகவல்கள் மீது நடததிய ஆய்வில் இது தெரியவந்துள்ளது. இந்த விபரத்தை அமெரிக்க இராணுவ விவகார நிபுணர் அந்தோனி கார்ட்ஸ் மேன் வெளியிட்டுள்ளார்.

வெளிநாட்டுத் தீவிரவாதிகளில் அல்ஜீரிய நாட்டைச் சேர்ந்தோர் அதிக அளவில உளளனர்.இவர்கள் 20சதவீதம் பேர் உள்ளனர். அதற்கு அடுத்தபடியாக சிரியா, ஏமன்,சூடான்,எகிப்து,சவூதி ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் உள்ளனர்.

வோஷிங்டனில் உள்ள இராணுவ உத்திகள் மற்றும் சர்வதேச விவகார ஆய்வு மையத்தில் பணியாற்றுபவர் அந்தோனி.

ஈராக்கில் அமெரிக்கக் கூட்டணிப் படைகளை எதிர்த்துப் போரிட்டுவரும் வெளி நாட்டுத் தீவிரவாதிகளின் ஜோர்டானிய தீவிரவாதி அபு முஸாப் அல்-சர்காவி என்பவரின் கட்டுப்பாட்டில் உள்ளனர். அவ்வாறு போரிடும் வெளிநாட்டு தீவிரவாதிகளின் எண்ணிக்கை ஆயிரம் இருக்கும். ஜனவரி 30 தேர்தலுக்குப் பிறகு அந்த எண்ணிக்கை உயர்ந்திருக்கலாம் என்பது அமெரிக்க தரப்பு வட்டாரங்களின் நம்பிக்கை.


இந்நிலையில்,சவூதி மற்றும் இதர பிராந்திய உளவுத் தகவல்களின் அடிப்படையில் நடத்தப்பட்ட ஆய்வு குறித்து தனது அறிக்கையை கடந்த வியாழக் கிழமை வெளியிட்டார் அந்தோனி. அதில அவர் மேலும் கூறியுள்ளதாவது,

ஈராக்கில் 3000 வெளிநாட்டுத் தீவிரவாதிகள் அமெரிக்கக் கூடடணிப் படையை எதிர்த்துப் போராடுகின்றனர் என்றால் அதனால் மிகப்பெரிய அச்சுறுத்தல் இருக்கும்.

ஈராக்கில் வெளிநாட்டுத் தீவிரவாதிகள் எத்தனைபேர் உள்ளனர் என்பது முக்கியமில்லை. தற்கொலைப் படைத் தாக்குதலுக்கும் பெரிய அளவில் குண்டு வெடிப்பு நடத்தவும் போதுமான தீவிரவாதிகள் தானாகவே முன்வந்து சேர்கின்றனர்.

முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் ஆதரவாளர்களை பெரிய அளவில் உள்நாட்டுப் போரில் ஈடுபடுத்தவும் வெளிநாட்டுத் தீவிரவாதிகள் முயற்சிக்கின் றனர்.இந்த தீவிரவாதிகளில் பலர் இராணுவத்தின் தாக்குதலிலிருந்து தப்பித்து விடுகின்றனர்.

இவர்கள் மூலமாகவே இதர நாடுகளிலும் வன்முறை,பயங்கரவாத செயல்கள் இடம்பெறுகின்றன.அமெரிக்க மற்றும் ஈராக்கிய நிபுணர்களுடன் விவாதித்தபோது, சவூதி நாட்டின் மதிப்பீடு சரியாகவே இருக்கும் என்பது தெரியவருகிறது என்றார் அந்தோனி. (ற)



18ஆம் நூற்றாண்டை சேர்ந்த ரஷ்ய மன்னரின் மனைவி காத்ரினாவின் வைர நெக்லஸ் நேற்றுமுன்தினம் ஜெனீவாவில் ஏலம் விடப்பட்டது. இதன் விலை வெறும் 85.5 கோடி ரூபாய் தான்.

# சட்டவிரோத வெளிநாட்டுப் பயணம் 9 பேர் மர்மச் சாவு; உடல்கள் மீட்பு

## இத்தாலி அருகே சம்பவம்

(இத்தாலி).

சட்டவிரோதமாக வேறு நாடுகளில் குடியேறச் சென்ற 9 பேர் இத்தாலி அருகே படகிலிருந்து உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளனர்.இவர்களில் 2பேர் பெண்களாவர்.

ஆனால், இவர்கள் எப்படி இறந்தனர் என்பது மர்மமாகவே உள்ளது.

வட ஆபிரிக்காவிலிருந்து வேறு நாடுகளில் குடியேறுவதற்காகச் சிலர் கள்ளத்தனமாக படகில் சென்றுள்ளனர். இந்தப் படகு இத்தாலி நோக்கி வருவதாக தகவல் கிடைத்துள்ளது. இருப்பினும் மோசமான வானிலை மற்றும் கடல் சீற்றம் காரணமாக இந்தப் படகைக் கண்டுபிடிக்க முடியவில்லை என இத்தாலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால்,நேற்றுமுன்தினம் காலை சசிலியன் தெற்கு கடற்கரைப் பகுதி அருகே கரை ஒதுங்கிய படகில் 2 பெண்கள் உட்பட 9பேரின் சடலங்கள் இருந்தன. மேலும், உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த 10பேரை அதிகாரிகள் மீட்டு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.

15 மீற்றர் நீளமுள்ள இந்தப் படகில் சுமார் 200பேர் கள்ளத்தனமாகப் பயணம் செய்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. ஆனால், எஞ்சியவர்களின் கதி தெரியவில்லை.இவர்கள் லிபியா மற்றும் டுனீஷியாவிலிருந்து வந்திருக்கலாம் என இத்தாலிய அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ற)



கியூபாவின் ஹவானா பல்கலைக் கழக மாணவர்களுடன் அந்த நாட்டு அதிபர் பிடல் காஸ்ட்ரோ ஆர்வமுடன் உரையாடுகிறார்.



கம்போடிய இராணுவத்திடம் ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட தரையில்இருந்து விண்ணில பாய்ந்து தாக்கும் ஏவுகணைகள் உள்ளன.தீவிரவாதிகளின் கையில் சிக்காமல் இருக்க இவ் ஏவுகணைகளை அழிக்க இராணுவம்முடிவு செய்தது. காம்போங் ஸ்பியு மாநிலத்தில் இவ் ஏவுகணைகள் நேற்று குண்டுவைத்து அழிக்கப்பட்டன.

காட்டுமிராண்டியின் விலங்குணர்ச்சி நம் எல்லோரிடமும் உள்ளடங்கிக் கிடக்கிறது. - ப்ராய்டு

வலம்புரி

## மகிந்தவின் பதவியேற்பு சமாதானத்திற்கு ஆப்பு?

நாட்டின் ஐந்தாவது ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ பதவியேற்றுள்ளார். நேற்றைய தினம் ஜனாதிபதி செயலகத்தில் பதவியேற்ற மகிந்த ராஜபக்ஷ அங்கிருந்தவாறு நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

அவரின் உரைகுறித்த விமர்சனம் அரசியல் புலத்தில் கருக்கட்டியிருக்கும் இவ்வேளையில் மகிந்தவின் வெற்றி சமாதானத்தின் தோல்வியா? என்ற ஏக்கம் மக்கள் மத்தியில் இல்லாமலும் இல்லை.

மகிந்த ராஜபக்ஷ சமாதானத்திற்கு விரோதமானவர் என்பதற்கு முன்னைய எச்சங்கள் குறிப்பிடத்தக்களவில் இல்லாதிருப்பினும் ஜே.வி.பி , ஜாதிக ஹெலஉறுமய போன்ற கட்சிகளுடனான கூட்டு அவரை சமாதான விரோதியாகவே காட்சிப்படுத்து .கின்றது.

மகிந்தவின் சிந்தனைகள் என்ற புதிய வடிவம் நாட்டை ஒற்றுமைப்படுத்துமா? அல்லது இரண்டாகப் பிரித்துவிடுமா? என்பதே தற்போதைய விவாதம்.

ஜனாதிபதியாகப் பதவியேற்ற மகிந்த ராஜபக்ஷ சமாதானப் பேச்சை முன்னெடுத்துச் செல்வதாகக் கூறியிருந்தாலும் அவரது உரையின் தொடர்ச்சி சமாதானத்திற்கானதாக தெரியவில்லை.

சமாதானப் பேச்சுவார்த்தை என்பது இருதரப்புச் சார்ந்தது. சமாதானப் பேச்சுக்களை தனித்து ஜனாதிபதி மகிந்த மட்டும் முடிபு செய்துவிடமுடியாது. அரசபடைகளுக்கு ஈடாக சமபலம் கொண்ட விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுக்களுக்கு சம்மதித்தால் மட்டுமே அது சாத்தியமாகும்.

இதனை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உணர்ந்துகொள்ளத் தவறிவிட்டார். அவர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில்;

பொதுக்கட்டமைப்பை தனக்குக்கீழ் கொண்டுவருதல், யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீளாய்வுசெய்தல் என்ற இரண்டு விடயங்களை வலியுறுத்திக் கூறியுள்ளார்.

பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கை என்பது சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணியை அரசும் விடுதலைப் புலிகளும் இணைந்து மேற்கொள்வதற்கான உடன்படிக்கையாகும். இந்த உடன்படிக்கையைச் செய்வதில் ஏற்பட்ட தாமதமே சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முட்டுக்கட்டையாகியது.


சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மக்களுக்கான நிவாரணப் பணியில் விடுதலைப் புலிகளும் இணைந்துகொள்வது அவசியம் என்பதை சர்வதேச சமூகம் ஏற்றுக் கொண்டிருந்தது.

சர்வதேச சமூகத்தின் அழுத்தம் காரணமாகவும், பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கைக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இணங்கிக்கொண்டார் என்பது மறுக்கமுடியாத உண்மை.

இந்நிலையில் பொதுக்கட்டமைப்பை தனக்குக்கீழ் கொண்டுவரும் தீர்மானத்தை மகிந்த தனித்து எடுப்பாராயின் அது அவரின் சமாதான முயற்சிக்கு பாதகமாக அமையுமென்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

## புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு பிரபாவின் கனத்த செய்தி காத்திருக்கின்றது

### சி.என்.என். கட்டுரையில் தெரிவிப்பு



(கொழும்பு)

**இலங்கைத் தீவில் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ள மஹிந்த ராஜபக்ஷவுக்கு தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனின் கனத்த செய்தி காத்திருக்கிறது என்று சி.என். என் ஊடகம் தெரிவித்துள்ளது.**

ஜனாதிபதி தொடர்பாக சி.என்.என். வெளியிட்டுள்ள கட்டுரையில் கூறப்பட்டிருப்பதாவது,

தமிழர்களுக்கான அதிகாரப் பகிர்வை மஹிந்த ராஜபக்ஷ எதிர்க்கிறார். முன்னைய யுத்த நிறுத்த ஒப்பந்தம் முறிவடைந்த போது நோர்வேயை அனுசரணையாளராக அழைத்து அமைதிப் பேச்சுகளை ரணில் விக்கிரமசிங்க தொடங்கினார்.

இருப்பினும் 2003ஆம் ஆண்டில் அமைதிப் பேச்சுக்களில் இருந்து விடுதலைப்புலிகள் விலகிக் கொண்டனர். அதன் பின்னர் இரு தரப்பினரும் யுத்த நிறுத்த மீறல் தொடர்பாகத் தொடர்ந்து குற்றம் சாட்டி வருகின்றனர்.

தாம் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் அமைதிப் பேச்சுக்களை மீளத்தொடங்குவதாகவும்,அமைதியைக் கொண்டுவருவதாகவும் சுதந்திரக் கட்சியுடன் இணைந்து தேசிய அரசு அமைப்பதாகவும் ரணில் விக்கிரமசி. தெரிவித்திருந்தார்.

ஆனால் , ஜனாதிபதித் தேர்தலில் எவ..ரையும் ஆதரிக்கப் போவதில்லை என்று நவம்பர் 10ஆம் திகதி விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு வெளியானதில் ரணிலின் ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பாதிப்பு ஏற்பட்டது.

தென்னிலங்கையில் அமைகின்ற அரசுகள் எதுவும் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில்லை என்று விடுதலைப் புலிகள் தெரிவித்திருந்தனர்.

சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷ இருந்த போதும் அவரது பல தேர்தல் நிலைப்பாடுகளால் அவரது சொந்தக் கட்சியின் ஜனாதிபதியான சந்திரிகா குமாரதுங்கவுடன் முறுகல் நிலை ஏற்பட்டது.

ஜே.வி.பி மற்றும் பௌத்த பிக்குகளின் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவுடன் மஹிந்த ராஜபக்ஷ தேர்தல் உடன்பாடு செய்து கொண்டதும் அந்த முறுகலுக்கான காரணங்களில் ஒன்றாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான ஆழிப் பேரலைக்கான பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்த முனைந்தமைக்காக சந்திரிகா குமாரதுங்கவின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசிலிருந்து ஜே.வி.பி. வெளியேறியது. அதன் பின்னர் நாடாளுமன்றில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பானது சிறுபான்மை அரசாக இயங்குகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நேரடியாக எந்த ஒரு நிவாரணமும் சென்றடைகின்ற வகையிலான கட்டமைப்பும் கைவிடப்படும் என்று மஹிந்த ராஜபக்ஷ முன்னர் அறிவித்திருந்தார்.

அதேபோல் ,விடுதலைப் புலிகளுடனான அதிகாரப் பகிர்வு விடயத்திலும் மஹிந்தவுக்கும் சந்திரிகாவுக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. மக்களின் ஒப்பு தலைப் பெற்றே எந்த ஒரு அதிகாரப் பகிர்வையும் தாம் நடைமுறைப் படுத்துவேன் என்று மஹிந்த ராஜபக்ஷ கூறி வருகிறார். இது கூட்டாட்சி அதிகார முறை குறித்து பேசுகின்ற ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாட்டுக்கு எதிரானதாகும். அதிகாரப் பகிர்வு தொடர்பாக மஹிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாட்டை சந்திரிகா குமாரதுங்க கடுமையாக பொது மேடைகளில் விமர்சனம் செய்து வந்தார்.

இந்த நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற மஹிந்தவுக்கு ஒரு கனத்த செய்தி காத்திருக்கிறது. எதிர்வரும் நவம்பர் 27 ஆம் திகதியன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தமது மாவீரர் நாள் உரையில் விடுதலைப் புலிகளின் எதிர் காலச் செயற்பாடுகளை அறிவிப்பார்.

விமானப் படை உள்ளிட்ட இராணுவக் கட்டமைப்பை வலுப்படுத்தியிருக்கும் பிரபாகரன் புதிய ஜனாதிபதிக்குச் சொல்லப்போகின்ற செய்தி மிகவும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஒற்றையாட்சிக் கோட்பாட்டுக்குள் தீர்வா? அல்லது கூட்டாட்சி முறையிலான தீர்வா? அல்லது வேறு ஒரு கோரிக்கையா? என்று பிரபாகரன் அந்த உரையில் தெரிவிக்கக் கூடும் என்று சி.என்.என். செய்திக் கட்டுரையில் மேலும் கூறப்பட்டுள்ளது. (ற)

## இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் தனது நிலைப்பாட்டை மஹிந்த விளக்க வேண்டும்

### இரா. சம்பந்தன் கோரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மஹிந்த ராஜபக்ஷ இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான தமது நிலைப்பாட்டை விளக்க வேண்டும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

தேர்தல் முடிவுகள் தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

ஜே.வி.பி. ஹெல உறுமய போன்ற இனவாதக் கட்சிகளுடன் மஹிந்த ராஜபக்ஷ செய்துகொண்ட தேர்தல் உடன்பாடு காரணமாகத்தான் அவரால் இந்த வெற்றியைப் பெற முடிந்துள்ளது.

சிங்கள பௌத்த ம்க்கள் தங்களுடைய நலன்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காக மஹிந்தவுக்கு பெருமளவில் வாக்குகளை அளித்திருக்கிறார்கள்.

புலிகளுடனான போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மீளாய்வு செய்யப்படும், பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படக் கூடாது, நாட்டில் ஒற்றையாட்சி முறையே நீடிக்க வேண்டும் என்பது போன்ற கொள்கைகளை முன்வைத்து பிரசாரம் செய்யப்பட்டதாலேயே சிங்கள பௌத்த மக்களின் பெருமளவு வாக்குகளை மஹிந்த பெற்று இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார்.



இது விடயம் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ தலைவர் ரவூப் ஹக்கீம் கருத்து வெளியிடுகையில்,

நாட்டின் பெரும் பான்மை சமூகத்துக்கும் சிறு பான்மை சமூகத் துக்கும் இடையில் நடககும் போட்டியாக பரவலாக பார்க்கப்படுகிறது என்பது துரதிஷ்டவசமான நிலைமை.

சிறுபான்மையினரின் ஆதரவு இன்றி வெற்றி பெற்றுள்ள மஹிந்த ராஜ பக்ஷ சிறுபான்மை மக் களின் நலன்களைக் கவனத்தில் எடுக்கத் தேவையில்லை என்ற போக்கில் செயல்படாமல் அவர்களின் நலன்களுக்கு முன்னுரிமை தந்து ஒரு தேசிய தலைவராக கனவான் அரசியல் நடத்த வேண்டும்.

முஸ்லிம் சிறுபான்மையினருடன் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்த ஜனாதிபதியாகியுள்ள மஹிந்த ராஜபக்ஷ முயல வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நிர்வாக செயலர் புத்திரசிகாமணி இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில்,

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கேட்டுக்கொண்ட வகையிலேயே மலையகப் பகுதிகளில் மக்கள் வாக்களித்திருக்கிறார்கள் .இந்தத் தேர்தல் எமக்கு கிடைத்த வெற்றியாகும.

தெற்கிலும் வடக்கிலும் மக்கள் ரணில் விக்கிரமசிங்க மீது நம்பிக்கை வைக்கவில்லை என்பதையே இந்தத் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன என்றார். (ற)

## மஹிந்தவின் தலைமையில் சமாதான முயற்சிகள்

### முன்னெடுக்கப்படுமென்கிறது ஜப்பான் அரசு

(கொழும்பு)

புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையின் கீழ் சமாதான முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமென்று ஜப்பானிய அரசாங்கம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.


இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணுவதற்கு புதிய ஜனாதிபதி முயற்சிகளை மேற்கொள்வார் என்று தாம் நம்புவதாக ஜப்பானிய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கும் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் உதவி வழங்குவதில் ஜப்பானிய அரசாங்கம் உறுதியாக இருப்பதாகவும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள மஹிந்த ராஜபக்ஷவுக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ள ஜப்பானிய அரசாங்கம் இரு நாடுகளுக்குமிடையிலான நட்புறவுகளை மேலும் வலுப்படுத்த இருப்பதாகவும் தெரிவித்துள்ளது. வடக்கு -கிழக்கின் சில பகுதிகளில் வாக்களிப்பு மந்தமாக இருந்த போதிலும் ஜனாதிபதித் தேர்தல் அமைதியாக நடைபெற்றுள்ளதை பாராட்டுவுதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



**வேதாந்தம் என்பது வெறும் கேலி கூத்தோ வெட்டிப் பேச்சோ அல்ல. அது ஒவ்வொருவரும அனுபவித்து அறிய வேண்டிய ஒன்று. உங்கள் ஆற்றலின் மிகச் சிறிய பகுதியையே நீங்கள் அறிந்துள்ளீர்கள். எல்லையற்ற ஆற்றலும் நல்வாழ்த்துக்களும் உங்களுள் கடல் போலுளளது.**

சுவாமி விவேகானந்தர்



நேற்று இடம் பெற்ற ஜனாதிபதி பதவியேற்பு நிகழ்வினை படங்களில் காணலாம்

# மகிந்தவுக்கு அமெரிக்கா வாழ்த்து

(கொழும்பு)

இலங்கையின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள மகிந்த ராஜபக்ஷ விற்கு அமெரிக்கா வாழ்த்துத் தெரிவித்துள் ளது.

இது தொடர்பில் அமெரிக்கா வெளியிட் டுள்ள செய்திக் குறிப்பில்;

தமிழ்மக்களின் தேர்தல் புறக்கணிப்புக் குறித்த தமது அதிருப்தியையும் குறிப்பிட்டுள் ளது. இலங்கையின் ஒரு குறிப்பிட்ட பகுதி மக்கள் தங்களது கருத்தை வெளிப்படுத்தும் வாய்ப்பு தடுக்கப்பட்டதாகவும், இதுவிடயத் தில் விடுதலைப் புலிகளின் தலையீட்டுக்கு தாம் கண்டனம் தெரிவிப்பதாகவும் அமெரிக் கச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள் ளது. (இ-4)

# கொக்குவிலில் கடை எரிந்தது

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் சந்திப்பகுதியில் நேற்று பல சரக்குக்கடை ஒன்று தீயினால் எரியுண்டு நாசமாகியுள்ளது.

நேற்றுக் காலை இடம் பெற்ற இத் தீவிபத் தினால் பலசரக்கு கடையில் இருந்த பல இலட்சம் பெறுமதியான பொருட்கள் எரி யுண்டு நாசமாகியது. (இ-8)

# ஊர்காவற்றுறையில் துப்பாக்கிப்பிரயோகம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பகுதியில் நேற்று முன் தினம் பிற்பகல் துப்பாக்கிப்பிரயோகம் இடம் பெற்றுள்ளது.

இனந் தெரியாத இரு குழுக்களுக்கிடை யே இத்துப்பாக்கிப் பிரயோகம் இடம் பெற் றுள்ளது. இத்துப்பாக்கிப்பிரயோகம் ஒரு சில நிமிடங்கள் இடம் பெற்றதாகவும் எனினும் எவருக்கும் எந்த விதமான பாதிப்பும் ஏற்பட வில்லை எனவும் தெரியவருகிறது. (இ-8)

# அநுராவுக்கு...

ஜனாதிபதி தனது முடிபில் மாற்றத்தை ஏற்படுத்தி அநுராவுக்கு பிரதமர் பதவியை வழங்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை பிரதமர் பதவியை சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மூத்த உறுப்பினர் டி.எம்.ஜயரட்ணவுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மற்றொரு தகவல் குறிப்பிடுகிறது. (இ

# மகிந்த நேற்று...

சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் போட்டி யிட்ட மகிந்த ராஜபக்ஷ 180786 மேலதிக வாக்குகளினால் வெற்றி பெற்று புதிய ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டார்.

மகிந்தவுக்கு 4887152 வாக்குகளும் ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் போட்டியிட்ட ரணில்விக்கிரமசிங்கவிற்கு 4706366 வாக்குகளும் கிடைத்தன. (இ-8)

# புலிகள் ஐ.தே.கவை தோற்கடித்து விட்டனர்

## ராஜித சேனாரட்ன குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை தமிழீழ விடுதலைப் புலிகள் தோற் கடித்துவிட்டனர். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன குற்றஞ்சாட்டியுள்ளார். அவர் மேலும் பேசுகையில்;

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபா கரனின் மனஎழுச்சி குறித்த எமது அனுப வம் தோல்வியடைந்துவிட்டது.

வடக்குக் கிழக்கில் பாரிய அளவிலான வாக்குகள் ஐக்கிய தேசியக்கட்சிக்குக் கிடைக் கும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் விடு தலைப் புலிகளின் அரசியல் தந்திரோபாயத் தால் ஐக்கியதேசியக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டிய பெரும்பான்மையான தமிழ் வாக் காளர்கள் வாக்களிக்காமல் தடுக்கப்பட்டு விட்டனர்.

தமிழர்கள் வாக்களித்திருந்தால் ஆகக் குறைந்த பட்சம் 5 இலட்சம் வாக்குகளை யாவது பெற்றிருப்போம். தென்னிலங்கை யில் ஒரு கடும்போக்காளர் வருவதன் மூலம் யுத்தத்தை மீளவும் தொடர தமிழீழ விடுதலை புலிகள் எண்ணுகின்றனர்.

சர்வதேச வலைப்பின்னலுடன் கூடிய அமைதி முயற்சிகளில் இருந்து வெளியேற வேண்டிய தேவை விடுதலைப்புலிகளுக்கு உள்ளது. இதற்காக மகிந்த ராஜபக்ஷவினது வெற்றி அவர்களுக்கு தேவைப்படுகிறது என்றார் ராஜித சேனாரட்ன. (இ-8)

# தமிழீழ விடுதலைப்புலிகளுடன்...

பேச்சுவார்த்தைகளை தொடங்குவதற்கு தாங்கள் தயாரென விடுதலைப்புலிகள் அறி வித்ததும் இந்த பேச்சுவார்த்தைகள் நடை பெறும்.

சமாதான நடவடிக்கைகளில் பங்கேற்க வெளிநாடுகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும். அத்துடன் யுத்த நிறுத்தத்தை மீளாய்வு செய்வதற்கு அரசாங்கம் தயாராக உள்ளது. அதற்கு தொடர்புடையவர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தப்படும்.

கொலை ,கடத்தல் ,ஆட்சேர்ப்பு ஆகிய வற்றை தடுக்கும் வகையில் யுத்தநிறுத்த உடன்படிக்கை மீளாய்வு செய்யப்பட வேண் டும். ஒரு வருடத்திற்கு முன்னர் ஏற்பட்ட பேர ழிவான ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வர்களின் வாழ்கை மீண்டும் கட்டியெழுப் பப்படும். இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள் வதற்காக எனது நேரடி கண்கா ணிப்பின் கீழ் அமைப்பு ஒன்று உருவாக் கப்படும்.

நாட்டின் அபிவிருத்தியை முன்னெடுக்க பல நடவடிக்கைகள் எடுக்கப்படும். உலக அரங்கில் நம் நாட்டுப் பொருளாதாரம் உரிய நிலைக்கு கொண்டு செல்லப்படும். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வர வேற்கப்படுவர்.

நாட்டின் பொருளாதாரத்தின் மூலமான நன் மைகள் மக்களுக்கு கிடைக்க வகைசெய் யப்படும். நாட்டின் சட்டம் நியாயமானதாக இருக்க வேண்டும். அதற்கு அனைவரும் கட்டுப்படுவதுடன் அதனை மதிக்கவும் வேண்டும்.

அதிகாரத்தை பயன்படுத்தி சட்டத்தை மீறக்கூடாது. எனது பிரதமர், அமைச்சர்கள், முப்படையினர் மற்றும் அரச அதிகாரிகள் நாட்டின் நல் லாட்சியை ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகளை மேற் கொள்ள வேண்டும்.

அரச நிறுவனங்கள் ஊழல் மோசடிகள் இன்றி பொதுமக்களுக்கு சேவையாற்ற வேண்டும். இன்று முதல் சட்ட ஒழுங்கு மற்றும் மனித உரிமைகள் பாதுகாக்க நடவடிக் கையெடுக்கப்படும்.

என்னை எதிர்த்து தேர்தலில் போட்டியிட்ட எவரையும் நான் எதிரியாக கருத மாட்டேன். சமாதானத்தை ஏற்படுத்த அனைத்து கட்சிகளும் உதவ வேண்டும். நான் பல சவால் களுக்கு முகம் கொடுத்தே இந்த பதவிக்கு வந்துள்ளேன்.

எதிர்காலத்தில் பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். அவற்றுக்கு நான் தைரியமாக முகம் கொடுப்பேன். ஆசிய நாடுகளுடன் ஒன்றிணைந்து நாம் பணியாற்றவுள்ளோம். நாட்டிற்கு உகந்த வெளிநாட்டுக் கொள்கையை வகுக்கவுள்ளோம். பொது மக்கள் என்னை சந்திப்ப தற்கு எவ்வித தடையும் போடப்படமாட்டாது.

முகஸ்துதி செய்பவர்களை நெருங்கிய நண்பர்கள் என்று கருதவில்லை. நியாயமாக விமர்சிப்பவர்களையே நெருங்கிய நண்பர்களாக கருதுகிறேன்.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளின்போது முன்வைக் கப்பட்ட கொள்கையானது இனி தேசியகொள்கையாக்கப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

மிகிந்தசிந்தனைகளை உள்ளடக்கியதாக வரவு செலவுத் திட்டம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் மகிந்த ராஜபக்ஷ தனது உரையில் குறிப்பிட்டார். (இ

சிறப்புத் தள்ளுபடி
வீடுகளில், கையிருப்பு உள்ளவரை மட்டுமே
அலுவலகங்களில் பாவிக்கக்கூடிய
முறையில் டயலொக் G.S.M, மொபிரெல் G.S.M,
மேசைத் தொலைபேசிகள் பூட்டித் தரப்படும்.
9500/=
டயலொக் வெளிச் செல்லும் அழைப்பு ரூ.4.60
கையடக்க தொலைபேசி விற்பனைக்குண்டு
டயலொக் 500/=, மொபிரெல் 300/= பக்கேஜ் இணைப்புக்களுக்கு
உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்.
தொடர்புகட்கு:
நியூ பவர் செலூலர் ட்ரேடிங் கம்பனி
இல : 205/01 கஸ்தூரியார் வீதி
(ராஜா தியேட்டர் அருகில்) யாழ்ப்பாணம்
T.P: 0712 399220, 0714 182500, 0773518330

மனோகரா யாழ்.
யாழ். நகரில் முதன்முறையாக DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்





விஜய் + அசின்
கா.நேரம் 10.30, 2.30 6.30, 9.30(பு.நே)
சில தினங்கள் மட்டும் மாலை 8.30 காட்சி காண்பிக்கப்படும்

ராஜா சினிமா
இந்தியாவிலும் யாழ்ப்பாணம்
இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
தனுஷ், பிரியாமணி மற்றும் மலர் நடித்த
பாலுமகேந்திராவின் கதை, வசனத்தில்
இளையராஜாவின் இசையில்
அது ஒரு கனாக்காலம்
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
20.11.05 இரவுக்காட்சி
காண்பிக்கப்படமாட்டாது.

நிறைஞ்சனாஸ்
சங்கானை
சிவாஜி,
ரஜனி,
ஜெய்சங்கர்,
அம்பிகா நடித்த



படிக்காதவன்
கா.நே: 11.00, 2.45, 6.00 (பு.நே)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.11.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.